# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 04 புதன்கிழமை (16-02-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:70


## யாழ். குடாக் கடல் நீரேரியில் மீன்பிடிக்க உடனடி அனுமதி!

### ஈ.பி.டி.பி. சந்தித்த பின்னர் ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,பெப்.16

யாழ்.மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் நேற்று மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து நடத்திய பேச்சுக்களை அடுத்து யாழ். கடல்நீரேரியில் மீன்பிடிப்பதற்கான அனுமதி உடனடியாக வழங்கப்பட்டுள்ளது.

அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பைத் தொடர்ந்து ஈ.பி.டி.பி. குழுவினர் ஜனாதிபதியைச் சந்தித்து யாழ். மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக விளக்கிக் கூறினார்கள்.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளின் மாநாட்டை உடனடியாகக் கூட்டுமாறு அமைச்சின் செயலாளர் சந்திரானந்தடிசில்வாவை ஜனாதிபதி பணித்தார்.

அதன் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நேற்று மாலை 6 மணிக்கு மாநாட்டினைக் கூட்டினார். ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் இராணுவத்தளபதி, கடற்படைத் தளபதி, ஈ.பி.டி.பி. செயலாளர்நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ஆலோசகர் எஸ்.விக்கினேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.தவராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்.கடலேரி மீன்பிடி தொடர்பாக இம்மாநாட்டில் ஆராயப்பட்டது. யாழ்.கடல்நீரேரியில் டிசம்பர் பதினோராம் திகதிக்கு முன்பிருந்த ஒழுங்கில் மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்படவேண்டும் என்றும்-

அதிகாலை 5 மணி தொடக்கம் காலை 10மணிவரை மீன்பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றும்-

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வாகன அணி மீது தாக்குதல்

## மியாங்குளத்தில் 13 பொலீஸார் பலி!

### 15 பேர் படுகாயம்!!

மட்டக்களப்பு,பெப்ரவரி 16

**மட்டக்களப்பு - பொலநறுவை வீதியில் பொலீஸ் - இராணுவ வாகன அணி ஒன்றின் மீது நேற்று மாலை 4.45 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 13 பொலீஸார் உயிரிழந்தனர். மேலும் 15 பேர் படுகாயமடைந்தனர்.**

பொலநறுவையில் இருந்து இராணுவம் மற்றும் பொலீஸாரை ஏற்றிக் கொண்டு மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனத் தொடர் அணியே வாழைச்சேனைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கு அனுசரணையாளராகப் பணிபுரிய நோர்வேக்கு உத்தியோகபூர்வ அழைப்பு

## அரசு இன்று விடுக்கும்

- கொழும்பிலிருந்து 'உதயன்' செய்தியாளர் -

கொழும்பு,பெப்ரவரி 16

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு நோர்வேயை அனுசரணையாளராகப் பணிபுரிந்து உதவுமாறு, இன்று கொழும்பு வரும் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் நட்வொலே பெக்கிடம் அரசாங்கத் தரப்பு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கவுள்ளது.**

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அரசசார்பு எம்.பி. ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில்பேச்சுவார்த்தை நடைபெற உதவுவதற்கு நோர்வே ஏற்கனவே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களின் போது வடக்கு - கிழக்கு

## இணைப்பைப் புலிகள் வலியுறுத்தினால் அதை ஆதரிக்க மு.காங்கிரஸ் முடிவு!

- 'உதயன்' மட்டக்களப்பு செய்தியாளர் இரா.துரைரத்தினம் -

மட்டக்களப்பு,பெப்.16

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப்புலிகள் வடக்கு - கிழக்கு இணைப்பை வலியுறுத்துவார்களாக இருந்தால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் வடக்கு - கிழக்கு இணைப்பை ஆதரித்தே நிற்கும். தென்கிழக்கு மாகாண அலகு என்ற கோரிக்கையை அது வலியுறுத்தமாட்டாது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இவ்வாறு முடிவெடுத்துள்ளதாக அக்கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாம் தென்கிழக்கு மாகாண அலகு கோரிக்கையை வலியுறுத்தி நின்றால் வடக்கு-கிழக்கு இணைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய படையினர் இணைந்தால் மன்னிப்பு

### அரசு மீண்டும் அறிவிப்பு

கொழும்பு,பெப்.16

இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்கள் மீண்டும் வந்து சேர்வதற்கான மன்னிப்புக் காலம் ஒன்றை பாதுகாப்பு அமைச்சின் கூட்டு நடவடிக்கைத் தலைமையகம் மீண்டும் அறிவித்துள்ளது.

இதன்படி இம்மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் தப்பியோடிய இராணுவத்தினர் மீண்டும் இராணுவத்தில் தம்மை இணைத்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் - சிங்கள மீனவர் மோதலை அடுத்து

## திருமலைக் கோட்டையைச் சூழவுள்ள கடலில் மீன்பிடிக்கப் படையினர் தடை!

திருகோணமலை,பெப்.16

திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள பிரெட்றிக் கோட்டையைச் சுற்றியுள்ள கடல் பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக திருகோணமலைக் கடற்படையினர் நேற்று அறிவித்துள்ளனர்.

பிரெட்றிக் கோட்டைக்கு அருகில் உள்ள கடற்பகுதியில் கடந்த 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சிங்கள - தமிழ் மீனவர் களுக்கு இடையில் மோதல் சம்பவம் இடம் பெற்றதும் -

அதனைத்தொடர்ந்து திருகோணமலைக் கடற்பரப்பில் மீனவர்கள் எவரும் நேற்றுவரை தொழிலில் ஈடுபடக்கூடாது எனக் கடற்படையினர் அறிவித்திருந்ததும் தெரிந்தவையே.

இதனை அடுத்தே மேற்படி கடற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - தமிழ்க்கட்சிகள் பேச்சு

## நேற்று ஆராயப்பட்ட விடயங்களிலும் முழுமையான இணக்கம் இல்லை

கொழும்பு,பெப்.16

அரசாங்கத்துக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான நேற்றைய பேச்சுக்களின் போது ஆராயப்பட்ட விடயங்களில் முழுமையான - தெளிவான - இணக்கம் காணப்படவில்லை.

1997 ஒக்ரோபரில் சமர்ப்பிக்கப்பட்ட நகல் வரைவில் இருந்த பல அம்சங்கள் பலவீனமாக்கப்பட்டதைத் தமிழ்க் கட்சிகளால் அவதானிக்க முடிந்தது என்று தமிழ்க் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் பழைய நிலைக்கு அவற்றை மாற்றியமைக்க அரச தரப்பில் விட்டுக்கொடுப்புப் போக்கை காணமுடிந்ததாக தமிழ்க் கட்சிகளின் வட்டாரங்கள் மேலும் கூறின.

அரசமைப்பு சீர்திருத்தயோசனை தொடர்பாக தமிழ்க்கட்சிகளுடன் இணக்கம் காண்பதற்கான மூன்றாவது சுற்றுப் பேச்சுக்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்று நடைபெற்றன.

காணிப்பங்கீடு, கல்வி, நிதி, ஆளுநர் நியமனம், பிராந்திய சபைகளின் பிரதிநிதித்துவத்துடனான இரண்டாவது சபையை மத்தியில் அமைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக நேற்று ஆராயப்பட்டன.

இக் கலந்துரையாடல் நிறைவு பெறாமையினால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (18ஆம் திகதி) மீண்டும் பேச்சு நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

காணி விடயத்தைப் பொறுத்தவரை எட்டு லட்சத்து 8ஆயிரம் ஏக்கர் காடுகள் இலங்கையிலிருக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குமாரின் மனு தள்ளுபடி

யாழ். குடாநாட்டுக்கான விமானப் பயணத்துக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கோருவது அடிப்படை மனித உரிமைமீறல் எனத் தெரிவித்து அகில இலங்கைத் தமிழ் காங் கிரஸ் கட்சியின் செயலாளர் அமரர் குமார் பொன்னம்பலம் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்குத் தொடர்பான விசாரணை நேற்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற போது இது தனிநபர் உரிமை தொடர்பான வழக்கு என்பதால் குறிப்பிட்ட நபர் உயிருடன் இல்லாததினால் குறித்த மனுவினை தள்ளுபடி செய்வதாக நீதியரசர்கள் அறிவித்தனர். (ஐ-7)

# JAFFNA COLLEGE
## INTER HOUSE ATHLETIC MEET

to be held on
Friday the 18th at
2.30 p.m.

**Chief Guests: Mr. C. Mahalingam**
(Director of Projects, Jaffna)
&
**Mrs. Selvarani Mahalingam**
(Director of Education, Zone I)

*Parents, Alumni and friends are cordially welcome:*

(C/11032) **- Principal**



## வட மாகாண சகல கூட்டுறவு ஸ்தாபனத்தாருக்கும் தனியார் வர்த்தகர்களுக்கும் ஒரு வேண்டுகோள்

யாழ் மாவட்டத்திலிருக்கும் அரச அங்கீகாரம் பெற்ற ஒரேயொரு அளவை நிறுவை உபகரணங்கள் திருத்தும் நிறுவனம்

*மாஸ்டர் ஸ்கேல் சேவிஸ் அன்ட் என்ஜினியரிங் வேக்ஸ்*
200 ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம்

**ஆகவே மேடைத்தராசு, தூக்குத் தராசு, படிகள் மற்றும் அளவு கருவிகள் ஆகியவற்றைத் திருத்தி முத்திரையிடுவதற்கு ஏற்ற வகையில் செய்துகொடுக்க அரச அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம் மாஸ்டர் ஸ்கேல் சேவிஸ் ஆகும். ஆகவே உங்கள் தராசு, படிகள் மற்றும் அளவு கருவிகள் ஆகியவற்றைத் திருத்துவதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.**

**அரச அங்கீகாரம் அற்ற போலிகளும் உள்ளனர் என்பதை கவனத்தில் கொள்ளவும்.**

*மாஸ்டர் ஸ்கேல் சேவிஸ் அன்ட் என்ஜினியரிங் வேக்ஸ்*
200, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 73722 — **முகாமையாளர்.**


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணக வரவு
18 - 04 - 1921



விண்ணகச் செலவு
26 - 02 - 1999

### அமரர் கணபதிப்பிள்ளை நிற்சிங்கம்

**(இளைப்பாறிய உதவி முகாமையாளர், இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்)**

திதி வெண்பா

**மாண்பார் வெகுதானிய மாசியினிற் பூர்வபக்கத்**
**தீண்டியநல் லேகா தசிதிதியில் - ஆண்டகையார்**
**நிற்சிங்கம் ஈசனது நேரில் அடியிணைகள்**
**உற்றார் எனவே உரை.**

57, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(73702)

## மரண அறிவித்தல்.

### சின்னத்தம்பி சின்னக்குட்டி

இளவாலையை வதிவிடமாகக் கொண்ட சின்னத்தம்பி சின்னக்குட்டி அவர்கள் 11-02-2000 அன்று காலமானார்.

இவர் செல்லம்மாவின் அன்புக்கணவரும் வசந்தராணி (வசந்தா), வனஜகுமாரி (இத்தாலி), மகேந்திரன் (சுவிஸ்), நந்தினி (கொழும்பு), சாந்தினி (இத்தாலி), நளினி (சுவிஸ்), காமினி, மாலினி (இளவாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் இலட்சுமணர் (இளவாலை), கனகரட்ணம் (இத்தாலி), கந்தசாமி (இத்தாலி), விவேகச்சந்திரன் (இத்தாலி), ஸ்ரீ தில்லை நாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வக்குமார், ராஜ்குமார், சசிகுமார், நாகலட்சுமி, விஜயலட்சுமி, நிஷாந்தினி, பிரதாப்குமார், சாளினி, நிரோசன், பிரவீன், சுரேகா, சுரேன், லக்ஸன், சிந்துஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (15-02-2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
இளவாலை.

தகவல்:
சி.காமினி
(மகள்)

(C/11036)

## திருமுறை பாராயணம்

யாழ்ப்பாணம்,பெப்.16

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியத் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் ஆகியனஎதிர்வரும் சனிக்கிழமை பௌர்ணமி தினத்தன்று காலை 8மணிக்கு இளவாலை ஒல்லுடை அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்ப நாயகம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் ஈழத்தின் தலைசிறந்த பல தேவார இசை விற்பன்னர்கள் பங்குபற்றி சிறப்பிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இலங்கைத் தமிழர்கள் இருவர் கைது

சென்னை,பெப்.16

இராமேஸ்வரம் - மண்டபம் அகதி முகாமில் தங்கியிருந்த ஈழத்தமிழ் இளைஞர்கள் இருவர் கடந்த ஞாயிறு அன்று தமிழகப்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என இந்திய வானொலி தெரிவித்தது.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் மேற்படி அகதி முகாமுக்குள் ஊடுருவியுள்ளனர் எனக் கிடைத்த தகவலை அடுத்துப் பொலிஸார் அங்கு தேடுதல் நடத்தி இந்த இளைஞர்கள் இருவரையும் கைது செய்தனர் எனவும் -

இவர்களின் கைகளில் ஆயுதப் பயிற்சி பெற்றமைக்கான அடையாளங்கள் காணப்படுவதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் நியமனம்

அரியாலை,பெப்.16

யாழ். மாவட்டத்தில் இருந்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களாகப் பதவியுயர்வு பெற்ற மூன்று கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கும் பணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இது சம்மந்தமான கடிதம் வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டன.

யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு உதவி ஆணையாளராக க.கணேசமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக (கணக்காய்வு) கு.பாலசுப்பிரமணியமும், திருகோணமலை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக இ.விஜயரெத்தினமும் நியமனம் பெற்றுள்ளனர்.

(ஜ-17)


**லிபேட்டி**
**அச்சுவேலி**
**பிரசாந்த், ரியாசென்**
நடித்த
**குட்லக்**
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P – 070 – 212223
070 – 212678
(73658)

**ராஜா**
**யாழ்ப்பாணம்**
**இன்னும் இருதினங்கள் மட்டுமே**
**கார்த்திக், பானுப்பிரியா, ஜனகராஜ், நாசர்**
மற்றும் பலர் நடித்த
**கோபுரவாசலிலே**
காட்சிகள் 10.30, 2.30
(C/10989)

**நாகம்ஸ்**
**சுன்னாகம்**
**விஜய், மந்த்ரா, ரகுவரன்**
நடித்த
**லவ் டுடே**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.00
(புதிய நேரம்)
(C/11000)


# மரண அறிவித்தல்கள்

## இராமச்சந்திரன் சீதாதேவி

கிளெவ்லேண், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமச்சந்திரன் சீதாதேவி திருச்சியில், 14.02.2000 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராமச்சந்திரனின் அன்பு மனைவியும் கதிர்காமசேகரன்(இந்தியா), மணிமேகலாதேவி(கொழும்பு), ரவீந்திரன்(லண்டன்), மேனகாதேவி(லண்டன்), ரவிச்சந்திரன்(லண்டன்), உமாதேவி(ஜேர்மனி), உஷாதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், கமலாதேவி(இந்தியா), குலசிங்கம்(கொழும்பு), ஜெயமணி(லண்டன்), விஜயகுமாரன்(லண்டன்), சித்திரா(லண்டன்), ஜெகதீசன்(ஜேர்மனி), தேவநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிர்மலா, பிறேமிளா, பிரதீபன், வரலக்ஸ்மி, சஞ்சீவன், கவிதா, ஹரிராம், ஹரிப்பிரியா, சங்கர், அனந்தன், ஜெயந்தன், ஜெயராமன், லக்சாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று (15.02.2000) செவ்வாய்க்கிழமை திருச்சியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தபாற்கந்தோர் அருகில்,
நாவலடி,
கோப்பாய்.

தகவல்:
**செ.தேவநாதன்.**

(73723)

## திருமதி வைத்திலிங்கம் கெங்காரத்தினம்

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த திருமதி வைத்திலிங்கம் கெங்காரத்தினம் அவர்கள் 12.02.2000 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தியாகநாகலிங்கம் வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் நிரோஜன் (இந்தியா), நிருபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் செல்லத்துரை பேரம்பலம் (முன்னாள் உபதபாலதிபர்) - பேரம்பலம் கனகம்மா தம்பதிகளின் மகளும் திருமதி கெங்காசோதி (இந்தியா), அமரர் கெங்காசிவம், கெங்காபரம் (கனடா), கெங்காராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நகுலேஸ்வரம் (இந்தியா), நிர்மலா, ஜெயமலர் (இலங்கை வங்கி, வவுனியா), ராஜி, சி.நாகேஸ்வரி, தி.சுந்தரலிங்கம், தி.கணேசலிங்கம், வ.செல்வநாயகி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (17.02.2000) வியாழக்கிழமை 1.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மெய்கண்டான் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
**தி.வைத்திலிங்கம்,**
(கணவர்)

(73726)

## அன்னலிங்கம் ஐயா (உரும்பிராய்)

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்தவரும், கொழும்புத்துறை, துண்டி ஐயனார் கோயில் பூசகருமான அன்னலிங்கம் ஐயா (சிவப்பிரகாசம்) நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அருணாசலம் - இரத்தினம் தம்பதியினரின் அருமைப் புதல்வனும் இரத்தினபூபதியின் அன்புக் கணவரும் வனஜா,வசந்தா, வரலட்சுமி, அருனன், கிருபாகரன், ஆனந்தி, அரிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் திருவாளர்கள் தவராசா, தெய்வேந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுஜன், காருண்ணியன் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.02.2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் உரும்பிராயில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தகவல்:
**அ.பஞ்சாட்சரம்**
**அ.அமிர்தலிங்கம்**
(சகோதரர்)

(73700)

## திருமதி காந்திமதி நவரட்ணம்

புலோலி தெற்கு, 'மதிவாசம்' இல்லத்தைச் சேர்ந்த திருமதி காந்திமதி நவரட்ணம் 13.02.2000ஆம் திகதி ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம் (பிரதிப் பொலீஸ்மா அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு. திருமதி தியாகராசா தம்பதிகளின் மகளும் பஞ்சரட்ணம் (ஆஸ்திரேலியா), கல்யாணி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற திரு. திருமதி அதிஷ்டம் தம்பதிகளின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2000) புதன்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்திரேலிய முகவரி:
Mrs. B.Panchalingam,
4, Normanby Rd.,
Mupurn, NSW 2144,
Australia.
T.P.No: 297497220

தகவல்:
**திருமதி க.பரமேஸ்வரி**
'மதிவாசம்' புலோலி தெற்கு,
புலோலி.

(C/11034)

## திருமதி தம்பிராசா மனோன்மணி

நவாலியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா மனோன்மணி 15.02.2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும் ஜெயந்திமலர், சுகுமாரன் (கனடா), சிவகுமாரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசநாயகம் (கனடா), ஞானேஸ்வரி (கனடா), உஷாமாலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் நடராசா, காலஞ்சென்ற சீவரத்தினம், தியாகராசா, பாக்கியம், இராசம்மா ஆகியோரின் சகோதரியும் செல்லம்மா, நாகம்மா, காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, நடராசா ஆகியோரின் மைத்துனியும் ராதிகா, ரஜீவன், கார்த்திகா (மகாஜனாக் கல்லூரி), துளசி, ஷோபனா, ஷௌமிகா, கௌசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2000) புதன்கிழமை 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைலாய வைரவர் கோயில் முன்பாக,
நீதிமன்ற ஒழுங்கை,
மல்லாகம்.

தகவல்:
**ஜெயந்திமலர்** (சந்திரா - மகள்)
**சுகுமாரன்** (மகன்)
**சிவகுமாரன்** (மகன்)

(73727)

# வரியப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள்
# சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா சிறப்பு மலர்

## மஹோற்சவ குருவின் அருளாசிச் செய்தி

புராதன காலந்தொட்டு பாரம்பரியமாக மக்களால் வழிபாடு செய்யப்பட்டு வரும் கிராமிய கலாசார முக்கியத்துவம் வாய்ந்த ஸ்ரீமகாமாரிஅம்பாளுக்கு மங்களகரமான பிரமாதி வருஷத்தில் மாசிமக உற்சவத்தில் மகத்துவம் வாய்ந்த தேர்த் திருவிழா வைபவத்தில் தேவியின் அளப்பநம் கருணையினாலும் அடியவர்களின் பொருளுதவியினாலும் சரீர உதவியினாலும் தேவிக்கு ஓர் அழகிய சித்திரத் தேர் அமைக்கப்பட்டு வெள்ளோட்டப் பெருவிழாக் காணும் வைபவத்தில் அம்பாளின் அருட்கடாட்சம் கிடைக்க என் உளமார்ந்த நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வம் தேவிமயம் யஜது!

சுபம்.

**மஹோற்சவ குரு**
**பிரம்மஸ்ரீ செ. ரவிச்சந்திரக் குருக்கள்.**
அளவெட்டி தெற்கு.

## அழகு நிறைசித்திரத்தேர்

சுன்னாகம் வரியப்புலமுறை அருள்மிகு முத்துமாரித் தாயின் அழகு நிறை சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறத் தாயின் திருவருள் கைகூடிய சுபவேளையில், அன்னையின் அருள்மிகு நற்கருணையினால் வையகமெங்கும் அல்லல் நீங்கி இன்பம் பெருகவும் அம்பிகையின் மஹோற்சவவிழா சிறப்புற நிறைவெய்தவும் இவ்வரிய பணியைச் சிறப்புறச் செய்து நிறைவேற்றிய பக்தர்களுக்கும் ஆலயத்தேர் திருப்பணிச் சபையினருக்கும் தேரினைச் செம்மை நலம் பொருந்த அமைத்த ஸ்தபதியினருக்கும் அருளாசி கிட்டவும், வரியப் புலமுறை அம்பிகையின் பக்தர்கள் அருள் நலம் பெறவும் அகிலலோக நாயகியாம் அன்னை முத்து மாரி அம்பிகையின் பாதாரவிந்தங்களைப் பணிந்து வேண்டுகின்றேன்.

சைவத்தமிழ் இசை வாரிதி
**சிவத்திரு அ. குமாரசாமி ஐயர்**
நூலகர்
வலிவடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை (மல்லாகம்)

## ஸ்தபதியின் செய்தி

வரியப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய புதிய சித்திரத் தேர் நிர்மாணித்து வெள்ளோட்டம் நடைபெறுகின்ற மகிழ்ச்சியோடு எமது குரு அமரர் சிற்பமேதை செ. கந்தசாமி, கன்னிவெள்ளோட்ட நிகழ்வில் ஆசிகூறி வாழ்த்திய அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, ஈழத்தின் தலைசிறந்த கலைஞர்கள் யாவரையும் வணங்குகின்றேன். இந்தத் தெய்வீகத் திருப்பணியில் பங்கு கொண்ட தேர்த் திருப்பணிச்சபையினர்; சிற்பக் கலைஞர்கள் யாவருக்கும் மகாமாரியின் திருவருள் பெருக வணங்கி வாழ்த்துகின்றேன்.

தேர்த் திருப்பணி தெய்வீகப் பணி!

ஸ்தபதி விஸ்வப் பிரம்ம ஸ்ரீ
**செ. பாலச்சந்திரன்**
ஸ்ரீ காளிகா சிற்பாலயம், புத்தூர்.

### மலர் அமைப்பு:
### கு. தயாநந்தன்

## நோய் நொடிகள் தீர்க்கும் அன்னையின் அருள் கடாட்சம்

''பக்தியுடன் தொழுவோரின் நோய்கள் தீர்க்கும் பராபரையே மகாமாரி''

மேற்படி கோயிலில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை மகாமாரியின் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நடைபெறும் இப்புண்ணிய நாளிலே அன்னை மகாமாரியின் ஆலய வரலாறு பற்றிச் சிந்திக்கக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் என்னும் சிறப்புறு கிராமத்தின் வடஎல்லையை அண்மித்த பகுதியில் குறித்த பிரதான வீதியின் கிழக்குப்பக்கமாக 200 யார் தொலைவில் அமைந்துள்ளதே இவ்வாலயம்.

பக்தியுடன் தொழும் அடியார்களின் அல்லல் அகற்றி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அன்னைமகாமாரி இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாக இப்பதியில் எழுந்தருளி அடியார்களின் அல்லல் அகற்றி அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றாள்.

அக்காலத்தில் பெரியம்மை, சின்னம்மை, கொப்புளிப்பான், கோதாரி என்னும் பேதி ஆகிய கொடிய நோய்கள் ஏற்பட்டு மக்கள் இறப்புகளும் நடைபெற்ற காலம். அக்காலத்தில் இப்படியான நோய்களால் இறப்பவர்களை, இரகசியமான முறையில் அடக்கம் செய்வதும் யாவரும் அறிந்ததே. இன்னும் இந்நோய் ஏற்படும் இடங்களில் குறித்த நோயாளியைத் தனிமைப்படுத்திப் பராமரிப்பதும் மாரியம்மன் தாலாட்டுப்பாடி, வணக்கம் செய்து நோய் குணமாவதும் யாவரும் அறிந்ததே. இன்றும் இவ்வழக்கம் கிராமப் புறங்களில் நடைமுறையில் உள்ளது.

அக்காலத்திலே மேற்படி நோயினால் பீடிக்கப்பட்ட ஒரு பெண் இறந்த போது உடனே அவரது உடலைப் பாயுடன் சுருட்டி குறித்த வரியப்புலம் காணிக்குள் வடலிகள் சூழ்ந்த மறைவான இடத்தில் வைத்ததாகவும்; ஊரடங்கிய இரவு வேளையில் அடக்கம் செய்யப்போன போது அவ்விடத்தில் சடலத்தைக் காணவில்லையெனவும் சுருட்டிய வெறும் பாயே இருந்ததால் மக்கள் திகைப்படைந்த நிலையில் வீடு சேர்ந்தனர். அவர்களின் சொர்ப்பனத்தில் —

''நான் மாரியம்மன் - என்னை நீங்கள் தேட வேண்டாம். அதே இடத்தில் என்னை ஆதரித்து வணங்குங்கள்'' என்று கூறி மறைந்ததாம் அந்த உருவம்.

அன்றிலிருந்து அவ்விடத்தைத் துப்புரவு செய்து அதே இடத்தில் ஒரு கல்லை வைத்து வழிபாடாற்றி வந்தனர் என அறியக்கிடைக்கின்றது.

குறித்த இடத்தில் அருளாட்சி செய்து வந்த அன்னை மகாமாரியின் அருளுட்டத்தால் ஆரம்பத்தில் சிறிய அளவில் அமைக்கப்பட்டிருந்த ஆலயம் வளர்ச்சியடைந்து இப்

( 10 ஆம் பக்கம் பார்க்க )

## தமிழ் போல் வாழி!

சொல்விளங்கு கலைநலங்கள் வளங்களோங்கு
சுன்னாகம் வரியப்புலம் பதியமர்ந்த
செல்வி மகாமாரித்தாய் அடியார்க்கெல்லாம்
செழுங்கருணை மழைபொழிந்து வேண்டுமன்பர்
நல்வரங்கள் தந்துதவி ஞான சோதி
நாயகியாய் வீற்றிருந்தாள்! அந்தத் தாயை
பல்வருணக் கவின்தேரில் பார்ப்பதற்கு
பரவுபணித் தொண்டரெலாம் சேர்ந்துழைத்தார்.

★ ★ ★

சிங்காரத் தேரில்மகா மாரித்தாயை
சிறந்தகொலு விருக்கக் கண்டுவக்கும் அன்பர்
தங்காதல் மனத்தினால் கண்ணினாலே
தரிசித்துத் திருவருளின் தேன்சுவைத்து
மங்காத வாழ்வுநலம் பெருகிவாழி
மணித்தேரை ஆக்குவித்த அடியார் வாழி
சங்கீதக் கலைவாணி யருள்சேர்சிற்ப
சாத்திர நீள் தேர்செய்தோர் தமிழ்போல் வாழி!

★ ★ ★

ஆதிமகா முத்துமாரி அம்பிகை அடிகள்வாழி
சோதியாம் அவளைத்தேரில் தோத்தரித்
துணர்ந்தோர் வாழி
வேதமா நெறிகள் வாழி விளங்கிடுமடியார் மாரி
ஆதரவாலே இன்ப அருள்பொங்கி வாழி வாழி!

**அருட்கவி. சீ. விநாசித்தம்பி**

## அன்னையின் ஆசி

சிவனடியார்களாலும் திருக்கோயில்களினாலும் பெருமை பெற்ற இடம் சுன்னாகம் வரியப்புலப்பதி ஆகும். இப் பதியில் வாழும் பக்தர்களும் கல்விமான்களும் பாமரமக்களும் ஒன்றுபட்டு ஸ்ரீமகாமாரி அம்பாளுக்கு சித்திரத்தேர் ஒன்றை உருவாக்கி உள்ளனர். ஆண்டுக்கொரு தடவை அம்பாள் பவனிவரும் இந்த அற்புதமான தேரின் வெள்ளோட்டவிழா நடைபெறுவது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இரதோற்சவம் என்பது ஆலயங்களிலே நடைபெறுகின்ற உற்சவங்கள் அனைத்திலும் முதன்மை வாய்ந்தது. இத்தகைய அருட்பணிக்கு தமது நேரத்தையும் நிதியையும் தூய உள்ளத்தையுக் வழங்கி நிற்கும் அத்தனை அடியவர்களுக்கும் எமது ஆசி உரித்தாகுக!

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி, தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## அம்பாள் அருள் பெறுக

சுன்னாகம் வரியப்புலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலயம், அம்பாள் அடியார்களின் பெருமுயற்சியால் புனரமைக்கப்பட்டு முதன் முதலாக மஹோற்சவம் நடைபெற அருள்கிடைத்திருப்பது அடியார்கள் செய்த புண்ணியமேயாகும். அம்பாளுக்கு அழகிய தேர் ஒன்று செய்ய வேண்டும் என்ற தெய்வீகச் சிந்தனை இன்று நிறைவு பெற்று, அழகே உருவான சித்திரத்தேர் நமக்குக் காட்சியளிக்கிறது. 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்று நினைக்கத்தக்க முறையிலே தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது. அம்பாள் அருளில் எல்லோரும் திளைத்து அம்பாளின் பெருங்கருணைக்குப் பாத்திரமாவோமாக!

**திருமதி மங்கையர்க்கரசி**
**திருச்சிற்றம்பலம்**

## மகத்தான திருவருள்

சுன்னாகம் திருப்பதியில் பேரருள் பாலித்து வரும் வரியப்புலம் மகாமாரி அம்பாள் புதிய சித்திரத் தேரில் பவனி வர இருப்பதை அறிந்து அகமகிழ்கிறேன். இவ்வாண்டு மகா கும்பாபிஷேகம் நிறைவு பெற்று முதல் முதலாக நடைபெறவிருக்கும் மஹோற்சவத்தில் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் காண்பது அம்பாளின் மகத்தான திருவருளே. 'அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்' என்ற திருவருளுக்குப் பாத்திரமானவர்கள் வரியப்புலம் வாழ் மக்கள். சிறிய தோர் ஆலயமாக விளங்கிய தம்திருக்கோயிலை இன்று பெருங்கோயிலாக்கியுள்ளார்கள். இவ்வாலயத்தில் அருந்தொண்டுகள் ஆற்றிய அமரர் ஐயம்பிள்ளை உபாத்தியார் அவர்கள் கண்ட கனவு நனவாகிறது. கொழும்பிலிருந்து திருத்தேருக்குரிய அச்சை அனுப்பி சில வாரங்களில் அமரத்துவம் பெற்றார். இன்று ஆலயப் புனர்நிர்மாணப் பணிகளைத் தம் கடனாக நினைந்து பணி செய்த திருப்பணிச் சபையினர் போற்றுதற்குரியவர்கள். இப்புதிய தேரை நிர்மாணித்துள்ள சிற்பத்துறை வித்தகர் திரு. பாலச்சந்திரன் சிறந்த கலைஞர். அவரது கலைஞானத்திறனோடு உருவாகியுள்ள புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா அம்பாளின் திருவருளால் மிகச் சிறப்பாக நடைபெறப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**ஆறு. திருமுருகன்**


| | | | | |
|---|---|---|---|---|
| **பாலா பந்தல் சேவை**<br>ஐயனார்கோயில், சுன்னாகம். | **காளிரதம் ஒளியமைப்பு**<br>சந்தை வளவு, சுன்னாகம். | **ராயா மெடிக்கல்**<br>K. K. S வீதி, சுன்னாகம். | **ஜெயகிருஷ்ணா**<br>சுன்னாகம். | **மங்கை சில்க்**<br>மத்திய சந்தை, சுன்னாகம். |
| **ஐயப்பன் ரேடர்ஸ்**<br>சந்தை தெற்கு வீதி,<br>சுன்னாகம். | **Vinyl's Institute,**<br>வரியப்புலம், K.K.S. வீதி,<br>சுன்னாகம். | **ஸ்ரீ அம்பாள் ரேட்ஸ்**<br>80, (32) கே.கே.எஸ். வீதி,<br>சுன்னாகம். | **சசிக்குமார் நகையகம்**<br>35, கே. கே. எஸ். வீதி,<br>சுன்னாகம். | **ரிப்ரொப் உணவகம்**<br>மதவடி, வரியப்புலம்,<br>சுன்னாகம். |
| **தானியலட்சுமி அரைக்கும் ஆலை**<br>அண்ணமார்கோயிலடி,<br>சுன்னாகம். | **பிள்ளையார் வெதுப்பகம்**<br>196, K. K. S. வீதி,<br>சுன்னாகம். | **மகாமாரி ஒளி அமைப்பு பந்தல் சேவை**<br>வரியப்புலம்,<br>சுன்னாகம். | **சிவா கடைச்சல் தொழிலகம்**<br>192, K.K.S. வீதி,<br>சுன்னாகம். | **ரஞ்சனா புடைவையகம்**<br>இல. 4, மத்தியசந்தை,<br>சுன்னாகம். |
| **விஷ்ணு கரன்ஸ்**<br>20, டாக்டர்<br>சுப்பிரமணியம் வீதி,<br>சுன்னாகம். | **சரா சேது சேவிஸஸ்**<br>207, K.K.S. வீதி,<br>சுன்னாகம்.<br>T.P. NO. 070 - 212709. | **THABOTHARAN**<br>Glass, Aluminium,<br>Photo Framing<br>57, K.K.S. Rd. Chunnakam. | **காங்கேயன் வெதுப்பகம் & தொலைத்தொடர்பகம்**<br>K.K.S. வீதி, மல்லாகம். | **Delux, Electrical Electronic and Tele communication**<br>Chunnakam. T.P. 212683 |
| **சபரிநாதன் அரைக்கும் ஆலை**<br>புகையிரத வீதி, சுன்னாகம். | **செல்லமுத்து மருந்துக்கடை**<br>மத்திய சந்தை, சுன்னாகம். | **டைமண்ட் ரேடர்ஸ்**<br>டாக். சுப்பிரமணியம் வீதி,<br>சுன்னாகம். | **ஸ்ரீமுருகன் நகைமாடம்**<br>இல. 25, கே. கே. எஸ் வீதி,<br>சுன்னாகம். | **காயத்திரி அரைக்கும் ஆலை**<br>59, K K. S. வீதி சுன்னாகம். |

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்

ந. கபாலரூபனின்

பாசமிகு தந்தையார்

## உயர் திரு. நவரத்தினம்

அவர்கள்

11- 02- 2000 அன்று அகால மரணமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உயர்தர மாணவர்கள்

பளை மத்திய கல்லூரி.

(73694)

# 31 ஆம்நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 1942 — 06 — 13

விண்ணில் 2000 — 01 — 17

அமரர்

## திருமதி பரமேஸ்வரி நாகராசா

17- 01- 2000 அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி பரமேஸ்வரி நாகராசா அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.

எமது இல்லத்தில் இன்று (16-02-2000) புதன் கிழமை நடைபெற இருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அன்னாரின் பிரிவால் துயருறும்

குடும்பத்தினர்

(லக்சுமி ஸ்ரோர்ஸ்—நெல்லியடி)

திருமகள் சோதி வீதி,
தவிண்டில், கரவெட்டி.

(73506)

வாழைப்பழம் விலை மேலும் சரிவு

# வாழைச் செய்கையாளர் தொடர்ந்தும் நஷ்டத்தில்!

அரியாலை, பெப். 16

யாழ். குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து செல்வதால் வாழைமரச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வலிகாமத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் வாழைச் செய்கையாளர்கள் பெரும் நிலப்பரப்பில் வாழைமரச் செய்கையை ஆரம்பித்தனர். வாழைப் பழ வகைகளின் உற்பத்தி இதனால் திடீரென அதிகரித்தது. ஆனால் உற்பத்திக்கு ஏற்ப சந்தை வாய்ப்பைப் பெற முடியாத நிலை கடந்த சில வருட காலமாக நீடிக்கிறது. குறிப்பாக வாழைப்பழத்தை ஏற்றுமதி செய்ய வசதி இல்லாததால் உற்பத்தியாகும் பழங்கள் முழுவதும் குடாநாட்டு மக்களின் தேவைக்கே பயன்படுகின்றன. இதனால் சந்தைகளில் வாழைப்பழம் தினமும் வந்து குவிந்து விற்பனையின்றித் தேங்கிப் பழுதடைந்து வருகின்றன. விலையும் கிலோ 10 ரூபாவுக்கும் உட்பட்டதாகவே இருந்து வருகிறது.

கதலி, இதரை போன்ற பழங்கள் பெருமளவில் சந்தைகளில் காணப்படுகின்றன. கதலிப் பழம் கிலோ இரண்டு ரூபா வரை விலை வீழ்ச்சி கண்டுள்ளது. சில இடங்களில் வாழைக்குலைகள் கால் நடைகளுக்கு உணவாக்கப்படுகின்றன.

தற்போது மண்ணெண்ணெயின் விலை உயர்ந்துள்ளதால் தோட்டங்களுக்கு நீர் இறைக்கும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். வாழைச் செய்கையாளர்களுக்கு இது மேலும் நஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளது.

(ஐ-17)

# வாழ்த்துகின்றோம்

## யா/விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி.

பயனுறுதிமிக்க சேவையினை எமது கல்லூரிக்கு ஆற்றி இன்று கரவெட்டிக் கோட்டக் கல்வி அதிகாரியாகப் பதவியேற்கும் எமது கல்லூரியின்

அதிபர்

## திரு.க. அம்பலவாணர்

அவர்களை எமது கல்லூரிச் சமூகத்தினர் மகிழ்வுடன் வாழ்த்துகின்றனர்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.

(சி/11022)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி

## திருமதி அன்னப்பிள்ளை இளையப்பா

கைதடி நாவற்குழிப் பிரிவு கிராம அலுவலர்

இ. சபாநாதன் அவர்களின்

அன்புத் தாயார்

அன்னப்பிள்ளை இளையப்பா

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக

ஊழியர் நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.

(சி/10984)

# திருடர்கள் சிக்கினர்

அளவெட்டிப் பகுதிகளில் ஆள்கள் இல்லாத வீடுகளில் இடம்பெற்ற களவுகள் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அளவெட்டி குருக்கள் கிணற்றடிப் பகுதியில் உள்ள ஆள்கள் இல்லாத வீட்டில் சுமார் 300 ஓடுகளுடன் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் திருடப்பட்ட பொருள்களுடன் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# 3 புலிகள் உயிரிழப்பு

வன்னியில் இடம்பெற்ற இரு சம்பவங்களில் தமது தரப்பில் மூவர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

உடையார்புரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் 2ஆம் லெப். கயல் சோழன் (சிவநாதன் ஆனந்தன் — திருகோணமலை)

★ நதியரசன் (ரட்ணம்ராஜின் பராஜ் —யாழ்ப்பாணம்) ஆகியோரும்.

முகாவில் பகுதியில் கடந்த 13 ஆம் திகதி படையினருடன் இடம்பெற்ற மோதலில் லெப். கேணல் புவிதா (நடேசு நிர்மலாதேவி— பூநகரி என்பவரும் —

உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-8-7)

# திறப்பு விழா

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய ஆரம்பக் கல்வி செயற்பாட்டறை விளையாட்டு முற்றத் திறப்பு விழாவும் பொருட்காட்சியும் இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

பாடசாலை அதிபர் நா. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக வேலணைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ. தில்லைநாதன், புங்குடுதீவு — நயினாதீவு ப. நோ. கூ. சங்கத் தலைவர் டாக்டர் க. இராசரெத்தினம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

# திருநாடு அலங்கரித்த தெய்வீக நினைவலைகள்

# இரண்டாம் ஆண்டு



அன்னை மடியில்: 12 — 01 — 1922

ஆண்டவன் அடியில்: 16 — 02 — 1998

அமரர்

## பர்னாந்து அந்தோனிப்பிள்ளை

பொன்னின் புதையலே

அன்பென்னும் தேன்வார்த்தே அரவணைத்தீர்!
ஆருயிராய் எமைக்காத்தீர் அருமைத் தந்தாய்!
துன்பமதைக் காணாதே வளர்ந்தோம் ஐயா!
துடிதுடித்துக் கதறியெழப் பறந்த சோகம்
என்பினிலே இரத்தத்தில் அணுக்கள் ஊடே
இதயத்தின் நரம்பெல்லாம் பொங்கிப் பாயப்
பொன்புதையல் இழந்தவராய்த் துடிக்கின்றோமே
புனிதமுகம் இனியொருநாள் பார்ப்போமா நாம்?



அன்னை மடியில்: 14 — 12 — 1945

ஆண்டவன் அடியில்: 05 — 02 — 1998

அமரர்

## அந்தோனிப்பிள்ளை தேவதாஸ்

கற்பக நிழலே

பெற்றெடுத்த தாய்மடியை இழந்தே நாளும்
பெருக்கெடுத்த கண்ணீரில் மிதந்த காலம்
கற்பகப்பூஞ் சோலையென நிழல் சொரிந்தே
கட்டி அரவணைத்தவரே அப்பா! நாங்கள்
உற்றதுயர் மறந்தவராய் உங்கள் பாதம்
உறுதுணையென் றிருந்தோமே நெஞ்சம் வெந்தே!
பற்றியெரிந் திங்கேநாம் கலங்கு கின்றோம்!
பால்வார்த்த தெய்வத்தைக் காண்ப தெப்போ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரை வேண்டுகின்றோம்.

-- பிள்ளைகள்.

10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(73668)

# ருஷ்டியின் மரண தண்டனையை நிறைவேற்ற மேலும் சன்மானம்

## ஈரானிய நிறுவனம் ஒன்று அறிவிப்பு

தெஹ்ரான், பெப். 16

சர்ச்சைக்குரிய எழுத்தாளரான சல்மான் ருஷ்டிக்கு ஈரானிய ஆன்மீகத் தலைவர் 11 ஆண்டுகளுக்கு முன்னர் விதித்த மரணதண்டனையை நிறைவேற்றுபவர்களுக்கு, அப்போது அறிவிக்கப்பட்ட 28 லட்சம் டொலர் சன்மானமும் அதற்கான வட்டியும் சேர்த்து வழங்கப்படும்.

ஈரானில் உள்ள தெஹ்ரான் பவுண்டேசன் என்ற தனியார் நிறுவனம் ஒன்று இவ்வாறு அறிவித்துள்ளது. ருஷ்டிக்கு மரண தண்டனை விதிக்கிப்பட்ட 11 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அந்த நிறுவனம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

சல்மான்ருஷ்டி தனது நாவல் ஒன்றில் இஸ்லாத்தை இழிவுபடுத்தும் வகையில் எழுதினார் என்று தெரிவித்து ஈரானின் அப்போதைய ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லா கொமேனி தான் இறப்பதற்கு சில நாள்கள் முன்னதாக —1989 ஆம் ஆண்டு அவருக்கு மரண தண்டனை விதித்தார். ருஷ்டியின் தண்டனையை நிறைவேற்றுபவர்களுக்கு 28 லட்சம் டொலர் சன்மானம் தரப்படும் என்று அப்போது அறிவிக்கப்பட்டது.

## உலக அரங்கில்

எனினும் ருஷ்டியின் தண்டனையை ஈரானிய அரசு அண்மையில் ரத்துச் செய்து இருந்தது. ''தண்டனை நிறைவேற்றப்படுவதை அரசு விரும்பவில்லை ஆனால் தனியார் அமைப்புக்கள் தமது கருத்தை சுதந்திரமாக வெளியிடுவதற்கு எந்தத் தடைகளும்இல்லை'' என்று ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார். (இ-6-9)

# துருக்கியின் தென்பகுதியில் ஹிஸ்புல்லா-பொலிஸ் மோதல்

## 10 பேர் உயிரிழப்பு

அங்காரா, பெப். 16

துருக்கியின் தென்கிழக்கு நகரான வான்லெஸ்லில் பொலிஸாருக்கும் ஹிஸ்புல்லா இயக்கத்தினருக்கும் இடையில் நேற்று முன்தினம் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த மோதலில் 5 பொலிஸாரும் 5 ஹிஸ்புல்லா உறுப்பினர்களும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 5 பொலிஸார் காயமடைந்துள்ளனர்

ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் தங்கி இருந்த வீடு ஒன்றை பொலிஸார் முற்றுகையிட முயன்ற போது அங்கிருந்து ஒருவர் தப்பி ஓடியதாகவும் —

இதனை அடுத்து மற்றோர் வீட்டை சுற்றி வளைக்க பொலிஸார் முயன்ற போது இரு தரப்புக்கும் இடையில் கடும் சண்டை மூண்டதாகவும் — அங்காராவில் அதிகாரிகள் தெரிவித்தார்.

இதேவேளை —

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் ஹிஸ்புல்லாக்களுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் ஆயிரத்து 300 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ-6-9)

# ஜோர்ஜியாவில் கடும் சூறாவளி 11பேர் பலி! 100பேர் காயம்!!

ஜோர்ஜியாவின் தென் மேற்குப் பகுதியை கடும் சூறாவளி தாக்கியதில் 11 பேர் உயிரிழந்தனர். 100 - க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று மீட்புப் பணியாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலையில் வீசிய இந்தக் கடும் சூறாவளியால் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது வீடுகளை இழந்துள்ளனர். பல வீடுகள் இடிந்து தரைமட்டமாகி உள்ளன. அப்பிரதேசத்துக்கான மின்சாரம் மற்றும் போக்குவரத்து ஆகியன தடைப்பட்டுள்ளன.

மீட்புப்பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான உதவிப் பணியாளர்கள் இடிபாடுகளுக்குள் உயிருடன் சிக்கியுள்ளவர்களையும் சடலங்களையும் மீட்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (இ 6-9)

# பிரான்ஸ் விருது

இந்தியாவின் பிரபல சிதார் மேதை ரவிசங்கருக்குப்பிரான்ஸின் அதியுயர் சிவிலியன் விருது வழங்கப்பட்டுள்ளது.

இவர் இசைத்துறைக்கு ஆற்றிய சேவைக்காக கடந்த சனிக்கிழமை இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது. பிரான்ஸின் அதியுயர் விருதான இதனைப் பெறும் இரண்டாவது இந்தியர் இவராவார்.

புதுடில்லியில் இடம்பெற்ற விசேட வைபவமொன்றில் இந்த விருது ரவிசங்கருக்கு வழங்கப்பட்டது. (இ-10)

# 13 பேர் விசாரணையில்

லண்டன், பெப். 16

ஆப்கானிஸ்தானின் ஹரியானா எயார் லைன்ஸ் விமானத்தைக் கடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள 13 பேரை. பொலிஸ் காவலில் வைக்குமாறு பிரிட்டிஷ் நீதிவான் ஒருவர் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று இவர்கள் லண்டன் பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (இ-6-9)

# நில நடுக்கம்

மனாடுவா, பெப். 16

நிக்கரகுவாவில் நேற்று முன்தினம் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ரிச்டர் அளவு கோலில் இது 6 புள்ளியாகப் பதிவாகி உள்ளது.

எனினும் இதுவரை சேதங்கள் குறித்த தகவல் ஏதும் தெரியவரவில்லை என்று அதிகாரிகள் கூறினர். (இ-6-9)

# போர்த்துக்கல் அரசமொழி

டிலி, பெப். 16

கிழக்குத் திமோரின் சுதந்திர அரசாங்கத்தின் அரசமொழியாக போர்த்துக்கல் மொழி இருக்கும் என்று கிழக்குத் திமோர் விடுதலை இயக்கத் தலைவர் ஸனானா குஸ்மாவோ தெரிவித்துள்ளார்.

ஆங்கிலம்ம ற்றும்பகாட்டா, இந்தோனேசியா ஆகிய மொழிகள் அரச துணை மொழிகளாக இருக்கும் என்றும் அவர் கூறினார். (இ-6-9)

# வியட்நாம் பஸ் விபத்தில் 50க்கும் மேற்பட்டோர் பலி!

வியட்கொங், பெப். 16

வியட்நாமின் வடக்கு மாகாணம் ஒன்றில் பயணிகள் பஸ் ஒன்று ஆற்றுக்குள் விழ்ந்ததில் 50 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

மாணவர்கள் மற்றும் முதியோர் சென்று கொண்டிருந்த இந்தப் பஸ் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் இருந்து ஆற்றுக்குள் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

12 பேர் உயிர் தப்பிக் கரை சேர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அவர்களில் 8 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர். 20 க்கும் மேற்பட்ட சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. (இ-6-9)

# அரசமைப்பை மாற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு

புதுடில்லி, பெப், 16

இந்திய அரசமைப்புச் சட்டத்தை மறுசீரமைப்பதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

அரசின்இந்தத்திட்டம் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்றும் —

அரசமைப்பை மறுசீரமைப்பது தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள 11 பேர் கொண்ட குழுவில் நியமிக்கப்பட்டுள்ள சில உறுப்பினர்களின் நியமனம் சந்தேகத்துக்கிடமானது என்றும் —

இந்த நடவடிக்கை குறித்து அரசு முன்னரே நாடாளுமன்றில் தெரிவித்திருக்க வேண்டும் என்றும் — எதிர்கட்சிகள் தெரிவித்துள்ளன.

அதே சமயம் —

அரசமைப்பை மறுசீரமைப்பதற்கு அனைத்துக்கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும் என்று அரசு கேட்டுள்ளது. (இ - 6-9)

## சி.ரி.பி.ரியில் கைெயழுத்திட்டால்

# இந்தியாவுக்கு அணுத்துறையில் உதவுவதற்கு பிரான்ஸ் தயார்!

புதுடில்லி, பெப்.. 16

அனைத்துலக அணு ஆயுதத் தடை ஒப்பந்தமான சி.ரி.பி.ரியில் இந்தியா கையெழுத்திட்டால் சிவில் அணுசக்தித் துறையில் பிரான்ஸ் இந்தியாவுக்கு உதவி செய்யும்.

பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் கியூபேக் வெர்க்கின் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து வெளியாகும் இந்து நாளேடு ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக்கூறியுள்ளார்.

இந்தியாவின் தேவைகளை பெருமளவில் நிவர்த்தி செய்யக் கூடிய சிவில் அணுசக்தித் துறையில் இந்தியா வளர்ச்சி அடைவதற்கான ஒத்துழைப்புகளை வழங்க பிரான்ஸ் தயாராக உள்ளது. ஆனால் அதற்கு முன்னர் இந்தியா சி.ரி.பி.ரி உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும். என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-6-9)


D.சேனாதிராஜா அன் சன்ஸ்




கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்குமிடம், பல் கட்டுமிடம், மிதந்த பற்களுக்குக் கிளிப் செய்யுமிடம் மூக்குக் கண்ணாடிகள் யாவும் 25% விசேட கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர்: சே ஆனந்தராஜா

இல. 162
முதலாம் குறுக்குத்தெரு,
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)
யாழ்ப்பாணம். (73721)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில் 21 — 05 — 1916

ஆண்டவன் அடியில் 17 — 01 — 2000

## அமரர் செல்லையா துரைச்சாமி

அயர்விலான் அஞ்சான் அனைவர்க்கும் அன்புடையான்
துயர்கண்டு துஞ்சான் தொலைநோக்கு தானுடையான்
மயிர் நீங்கின் கவரிமான் மன்னுபுகழ் சைவம் தன்னை
உயிருக்கு மேலாக மதித்தான் சீர் துரைச்சாமி

இன்று 16—02—2000 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள்:
து. வைத்தீஸ்வரன், து. சுந்தரலிங்கம்.

இந்துக்கல்லூரியடி,
மானிப்பாய். (73707)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் வேலுப்பிள்ளை ஆறுமுகம்

(தெய்வம்)

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், மின்சாரசபை)

அன்னை மடியில் 29-08-1917 — கந்தன் காலடியில் 18-01-2000

திதி: 17-02-2000

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் இருப்பிடமாய் வாழ்ந்து எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கி நல்வழிப்படுத்தி வழி நடத்திய ஆருயிர்த் தந்தையே! உங்கள் பாச நினைவுகள் என்றுமே மறையாது. உங்கள் ஆத்மா சாந்தி பெறுவதாக,

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

— குடும்பத்தினர்.

வெல்லிக்கதோட்டம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (73710)

# விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப் 16

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 15 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு!

**சங்கானை**

(125260ஏ), (130657ஏ), (130822ஏ), (130822பி), (130822சி), (130822டி), (131748ஏ), (131748பி), (131864ஏ), (131865ஏ), (134838ஏ), (134838பி), (135575ஏ), (135602ஏ),

**யாழ்ப்பாணம்**

(134361ஏ).

**கோப்பாய்**

(131560ஏ), (131569ஏ), (131569பி), (134157ஏ), (134157பி), (135981ஏ), (135981பி), (136213ஏ), (136214ஏ), (136222டி),

**நல்லூர்**

(124251 ஏ), (124354 ஏ), (124360 ஏ), (124362 ஏ), (128099 ஏ), (128310 ஏ), (128314 ஏ), (128315 ஏ), (133054 ஏ(, (133271 ஏ), (133271 பி), (133275ஏ), (135892 ஏ), (135892 பி), (136001 ஏ), (136002 ஏ), (136003 ஏ), (136004 ஏ), (136005 ஏ), (136006 .ஏ) (136008 ஏ), (136009 ஏ), (136010 ஏ). (136012 ஏ), (136013ஏ) (136018ஏ), (136155ஏ), (136220ஏ), (136220பி), (136220சி). 136220டி), (136220ஈ), (136222ஏ), (136222பி), (136222சி), (137033ஏ), (137033பி), (130571பி), (130571சி), (131768ஏ), (131768பி), (131840ஏ), (131840பி), (135548ஏ), (135573ஏ), (135717ஏ), (135717பி), (135767ஏ).

**சண்டிலிப்பாய்**

(125453ஏ), (130566ஏ), (130566பி), (130704ஏ), (130813ஏ), (130813பி), (131756ஏ), (131756பி), (135503ஏ), (135536ஏ), (135543ஏ), (135544ஏ), (135561ஏ). (135561பி).

**தெல்லிப்பழை**

(131721ஏ), (131774ஏ), (131774பி), (131844ஏ), (135704ஏ),

**உடுவில்**

(135564ஏ), (129186ஏ), (129186பி), (129496ஏ), (129496பி), (130571ஏ), (131593ஏ). (131594ஏ), (131656ஏ), (131842ஏ), (131842பி) (131862ஏ), (135557ஏ), (135569ஏ), (135569பி), (135569சி), (135662ஏ). (135662பி), (135733ஏ), (135739ஏ),

(க)




# ஆஸ்திரேலிய - நியூஸிலாந்து போட்டிகள் இன்று ஆரம்பமாகும்

## பொன்டிங் விளையாடமாட்டார்!

சிட்னி, பெப். 16

ஆஸ்திரேலிய — நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் இன்று ஆரம்பமாக உள்ள கிரிக்கெட் போட்டிகளில் ஆஸ்திரேலிய அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர், றிக்கிபொன்டிங்கின் கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பங்குபற்றமாட்டார் என ஏ. எப். பி, செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஆஸி.—நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் நியூஸிலாந்தில் இடம்பெற உள்ள ஆறு ஒரு நாள் போட்டிகளிலும் பொன்டிங் பங்குபற்ற மாட்டார்.

ஆனால் அடுத்து இடம் பெற உள்ள மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் பங்கு பற்றுவார் எனவும்—

பொன்டிங்கிற்குப் பதிலாக மத்யூ ஹைடின் விளையாட உள்ளார் எனவும்—

மூன்று வாரங்களாவது பொன்டிங் ஓய்வு எடுக்க வேண் ம் என மருத்துவர்கள் கூறியதைத் தொடர்ந்துதான் இந்த முடிவு எடுக்கப்பட்டது

## கரபந்தாட்டம்

வலி. கிழக்கு, பெப். 16

கோப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் கரபந்தாட்டப் போட்டிகளில் இன்று பி. ப. 2மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

### 17 வயதுப் பிரிவு

★ நடராஜ இராமநாதன் கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

★ அச்சுவேலி ம.வி. எதிர் அத்தியார் இ.க.

### 19 வயதுப் பிரிவு

★ ஆவரங்கால் மகாஜனக்கல்லூரி எதிர் வாதரவத்தை விக்கினேஸ்வராக் கல்லூரி.

(இ-8-100)

எனவும்— மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 16

ஈ. ஆர். போக்குவரத்துச் சேவை ஆதரவுடன், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெற உள்ள அரை இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணிக்கு டயமன்ஸ் வி. க. எதிர் பொமேர்ஸ் வி.க.

★ மாலை 5 மணிக்கு பருத்தித்துறை ஐ. வி. க. எதிர் கருணாகரன் வி.க

சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறும். (இ-8)

★ ★ ★

யாழ். மாவட்ட கல்வி வலயங்களிலான மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 18 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று பிற்பகல் 2. 15 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் புனித சாள்ஸ் ம. வி அணியுடன் நெல்லியடி ம. ம. வி. அணியும், கைதடி மூத்துக்குமாரசாமி ம.வி. அணியுடன் நாவாந்துறை றோ.க.த.க பாடசாலை அணியும் மோதும். (இ)-8-86)

## ஸ்கந்தாவுடனான போட்டியில் இந்து மாணவன் சதம் அடித்தார்

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி மாணவன் ச. முரளிதரன் சதம் அடித்துள்ளார்.

புத்தாண்டு பிறந்த பின்னர் பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் இதுவே முதலாவது சதம் ஆகும்.

யாழ். இந்துக்கல்லூரி அணிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிக்கும் இடையில் இடம் பெற்ற ஆட்டத்தில் ஆட்டமிழக்காமல் 130 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் முரளிதரன் இந்தப் பெருமையை தனதாக்கிக் கொண்டார்.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் 244 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் சதம் அடித்த முரளிதரனுடன், கௌசிகன் 46 ஓட்டங்களைப் பெற்று அணியின் பலத்துக்கு நல்ல அடித்தளம் இட்டார். சிவகுகன் 4 விக்கெட்டுக்களையும் ஜெரோம் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 29 ஓட்டங்களை மட்டும் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. கைலேஸ்வரன் 6 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து, தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 128 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. முரளிதரன் 5 விக்கெட்டுக்களையும் லக்ஷ்மிகாந் 3 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

(இ-8-86)

## வலைப் பந்தாட்டம்

வலி. வடக்கு, பெப். 16

வலிகாமம் கல்வி வலய சண்டிலிப்பாய் கோட்ட மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் இடம்பெறும் வலைப் பந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:—

### 15 வயதுப் பிரிவு

★ இளவாலை கன்னியர் மடம் ம. வி. எதிர் பண்டத்தரிப்பு யசிந்தா.

★ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி எதிர் மாவிட்டபுரம் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

### 17 வயதுப் பிரிவு

★ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை எதிர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை.

★ இளவாலை கன்னியர் மடம் ம.வி. எதிர் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி,

### 19 வயதுப் பிரிவு

★ இளவாலை கன்னியர் மடம் ம. வி. எதிர் பண்டத்தரிப்பு யசிந்தா.


★ பண்டத்தரிப்பு இ. க. எதிர் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை.

(இ-8-86)

# நினைவலைகள்

**முதலாம் ஆண்டு நினைவு கூரல்** | **15 ஆம் ஆண்டு நினைவு கூரல்**





அமரர்
**ஆறுமுகம் துரைராசா**

மலர்வு
15–09–1935
உதிர்வு
27–02–1999

அமரர்
**துரைராசா இலங்கேஸ்வரன்**
(பாபு)

மலர்வு
26–10–1961
உதிர்வு
25–02–1985

எம் குடும்பத்தின் குலவிளக்கே! அன்பின் அப்பா! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றதுவே! இன்னும் பல ஆண்டுகள் சென்றாலும் நீங்காது எம் துயரம். அன்பின் திருவுருவே! பாசமிகு, தந்தையே! பெருமைக்கு உரியவரே! எம் குடும்ப நல் வாழ்வுக்காய் அயராது உழைத்தவரே! அன்பின் திருவுருவே! எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உம் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நீங்காதவையே!

உங்களிருவரது ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டி இறைஞ்சுகின்றோம். இன்று (16—02—2000) புதன்கிழமை நடைபெறும் அமரர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னார்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
மற்றும் ப. செல்வம் (மருமகன்).

90/2, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(78706)

உதயன்

## தேவை: விவேகம்!

இவ்வாண்டுக்கான வரவு — செலவுத் திட்டத்தில் பெரும் தொகை நிதி பாதுகாப்புச் செலவினத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு புறம் போருக்கு அதிக நிதி; மறுபுறம் நோர்வே ஏற்பாட்டுடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சு முயற்சி, இன்னொரு புறத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஏற்ற வகையில் அரசமைப்பைத் திருத்தும் நடவடிக்கையாக அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடல்கள்!

தற்போதைய அரசுத் தலைமைப்பீடம் அணிந்திருக்கும் பல்வேறு முகமூடிகளின் வெளித் தோற்றங்கள் தான் இவை.

''இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணும் வரை நாட்டில் முழுமையான அபிவிருத்தி காண முடியாது'' — என்ற உண்மையைத் தமது வரவு — செலவுத் திட்ட உரையில் ஒப்புக்கொண்டிருக்கும் ஜனாதிபதி, அதே வரவு — செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு மற்றும் யுத்தச் செலவுகளுக்கு மேலும் அதிகமாக நிதியை — அதாவது 5ஆயிரத்து 243 கோடி ரூபாவை — ஒதுக்கீடு செய்திருக்கின்றார்.

யுத்தத்தைத் தீவிரப்படுத்தி, புலிகளைத் தோற்கடிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம் என்ற சிங்களத் தீவிரவாத எண்ணத்தின் அடிப்படை, அரசின் போக்கிலும் ஊறியிருப்பதை இந்த அதிக நிதி ஒதுக்கீடு மீண்டும் ஒரு முறை தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றது.

கடந்த ஆறு ஆண்டுகளாகக் காலத்தை இழுத்தடித்து விட்டு இப்போது மீண்டும் அவசர அவசரமாகப் பேச்சுவார்த்தைக் 'கதையை' அவிழ்த்து விட்டிருக்கும் அரசு, அதில் கூட உண்மையான — விசுவாசமான — போக்கைக் கடைப்பிடிக்கவில்லை என்பதனையே இந்த நிதி ஒதுக்கீடு பட்டென்று புலப்படுத்துகின்றது.

கடந்த ஆறு ஆண்டுகளாக யுத்தத்தைத் தீவிரப்படுத்தி — வருடா வருடம் அதிகளவு நிதியைப் போருக்கு என்று செலவிட்டு — அரசு கற்ற பாடம் என்ன? வெல்ல முடியாத இந்த யுத்தத்தில் அநியாயமாக உயிர்ப்பலிகளையும் பெருமளவு உடைமைச் சேதத்தையும் இழக்க வைத்ததைத் தவிர கண்ட பயன் என்ன?

எனவே மீண்டும் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற பழங்கதையை — யுத்த வழிமுறையை — நாடுவதை விடுத்து, பேச்சுக்கு இப்போது கிடைத்திருக்கும் பொன்னான வாய்ப்பை அரசு உட்பட அனைத்துத் தரப்பினரும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இராணுவத் தரப்பின் அழுத்தங்களுக்கு இடங்கொடுப்பதோ, இனவாதக் குழுக்களின் சிற்றத்துக்குப் பயந்து அவற்றுக்கு மண்டியிடுவதோ இந்தப் பொன்னான வாய்ப்பைக் கைநழுவிப் போகச் செய்து விடும் என்பதை இந்த ஆறு ஆண்டு காலப்படிப்பினை ஊடாக அரசு புரிந்து கொண்டிருக்கும் என எதிர்பார்க்கலாம்.

இப்போது அரசுத் தலைமைக்குத் தேவைப்படுவது துணிவான முடிவு எடுக்கும் விவேகம்தான். இராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்கும் வழி அல்ல.

நாட்டில் சிங்களவர், தமிழர் என்ற பேதமின்றி எல்லோரும் அமைதியையும் சமாதானத்தையுமே விரும்பி ஆணை கொடுத்த பின்னரும் அரசு போரை நாடுவது நாட்டு மக்களுக்குச் செய்யும் துரோகமாகவே அமையும்.

# வவுனியாவில் தீவிர பாதுகாப்புச் சோதனைகள்

# மக்களை இடுக்கிப் பிடியாக இறுக்குகின்றன

வவுனியாவில் பாதுகாப்பு நிலைமை நாளொரு ''சென்றி'யும்', பொழுதொரு ''பங்கரு''மாக அதிகரித்துக் கொண்டே போகிறது. முன்னர் அடிக்கடி நடந்த மின்மாற்றித் தகர்ப்புகள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கிளைமோர் வெடிப்புக்களினால் நாளுக்கு நாள் இறுகிவந்த பாதுகாப்புக் கெடுபிடிகள், கடந்த ஜனவரி 27 இல் நடந்த தபால் நிலையக் குண்டு வெடிப்பை அடுத்து உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன.

அங்கிங்கெனாதபடி எங்கும் சோதனை நடவடிக்கைகளும் திடீர் திடீரெனப் பஸ்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் வரும் படையினர் வீதியில் சென்றுகொண்டிருக்கும் ஒருவர்மீது சந்தேகம் கொண்டால் உடனே அவரை வழிமறித்துச் சோதனை செய்து வருவதும் அதிகரித்துள்ளது. சைக்கிள்களையோ வாகனங்களையோ அவசரத்திற்கு விரும்பிய வசதியானஇடங்களில் விட்டு விட்டுப் போக முடியாது.

## பொதிகளில் எடுத்துச் செல்லும் பொருள்கள் ''தானமாகும்'' நிலை

வங்கிகள், அரச அலுவலகங்களுக்குள் மோட்டார் வாகனங்களிலோ அன்றிச் சைக்கிள்களிலோ செல்ல முடியாது. தூர இடங்களில் விட்டு விட்டுக் கால் நடையாகவே சென்று அலுவல்களைக் கவனிக்க வேண்டும். தவிர, வவுனியா ரயில் நிலையத்தில் ரயில் வரும்போதும் புறப்படும்போதும் மக்கள் கூடி நிற்பது வழக்கம். ரயிலில் வருவோரை அழைத்துச் செல்லவும் போவோரை வழியனுப்பி வைக்கவுமே இவ்வாறு மக்கள் கூடி நிற்பது வழக்கம். ஆனால் அவ்வாறு காத்திருப்போர் தற்போது ரயில் நிலையத்திற்கு முன்னால் கூடி நிற்பதற்கும் வாகனங்களை நிறுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. சுமார் 500 மீற்றர் தொலைவிலுள்ள மரநிழலின் கீழ் நிற்குமாறு கூறி அவர்கள் விரட்டப்படுகிறார்கள். இதனால் வரவேற்க வந்தவருக்கு, தமது உறவினர் வந்தாரா, வரவில்லையா என்று தெரியாத நிலையிலும், வழியனுப்ப வந்தவருக்குத் தமது உறவினர் போரானா, போகவில்லையா என்று தெரியாத நிலையிலும் மணிக்கணக்காக மரத்தின்கீழ் கால் கடுக்கக் காவல் நிற்கவேண்டிய ஒரு நிலை!

தவிரவும் வீதிகளில் பைகளுடனும், மூடை முடிச்சுக்களுடனும் போவோரின்

**செய்தி மடல்**

நிலையோ மிகவும் பரிதாபமானது. மொத்த வியாபாரிகள் சாக்குகளில் எடுத்து வரும் தேங்காயையும் கத்தரிக்காயையும் நடு வீதியிலே கவிழ்த்துக் கொட்டிச் சோதனை செய்வதும், அதிலும் உருளைக்கிழங்கு, தேசிக்காய் போன்றவற்றைக் அவிழ்த்துக் கொட்டும்போது அவை அங்கும் இங்கும் ஓட, அவற்றைத் துரத்திப் பிடித்து அள்ளிச் சாக்கில் போட்டு எடுத்துச் செல்வதும் அன்றாடக் காட்சிகளாகி விட்டன. அதிலும் இவ்வாறான சோதனைகள் முகத்தைப் பார்த்தே மேற்கொள்ளப்படுகின்றன. ஆண்களென்றால் மீசையும், பெண்களென்றால் பொட்டும் வைத்

**வவுனியாவிலிருந்து**
**இளவரசன்**

திருந்தால் அவர்கள் நிச்சயம் இந்தக் கெடுபிடிகளிலிருந்து தப்பவே முடியாத நிலை.

### வாகனங்கள் இறுக்கமான சோதனைகள்

இதேபோல், வவுனியாவிலிருந்து தென்பகுதிக்குச் செல்லுகின்ற மற்றும் அங்கிருந்து வருகின்ற வாகனங்கள் மீதும் சோதனைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. பொதிகளை ஏற்றிவரும் வாகனங்கள் முன்னர் மதவாச்சிக்கு முன்னாலுள்ள மைத்திரிபுர என்ற பகுதியில் வைத்து சோதனை செய்யப்பட்டு வந்தன. ஆனால் தற்போது வவுனியாவின் நுழைவாயிலான ஈரப்பெரியகுளம் பகுதிக்கு மாற்றப்பட்டு விட்டது. அங்கே பொதிகளுடன் போகும் வாகனங்களும் வரும் வாகனங்களும் ஒரே இடத்தில் நிறுத்தப்பட்டே சோதனையிடப் படுகின்றன. முன்னரோ, சோதனைகள் மேலெழுந்த வாரியாகவே மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இப்போதோ சோதனைகள் மிகவும் இறுக்கமடைந்துவிட்டன. பொதிகள் அனைத்தும் பிரிக்கப்பட்டு, தோண்டித் துருவி ஆராயப்படுகின்றன. இதனால் வாகனப் பயணம் தாமதமடைய வேண்டிய நிலை உண்டாகிறது.

பொதிகளுக்கான சோதனை உண்மையான குண்டுப் பரிசோதனையாகத் தெரியவில்லை என்று வாகன உரிமைக்காரர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். பொதிகளைப் பிரித்து அவற்றில் என்ன தமக்குத் தேவையான பொருள்கள் இருக்கின்றன என ஆராய்ந்து, அவற்றில் சிலவற்றை தங்களுக்கு எடுத்துக் கொள்வதிலேயே அங்குள்ள படையினரும் மற்றும் அங்குள்ள பொதி சுமக்கும் பெரும்பான்மை இனத் தொழிலாளிகளும் ஆர்வம் காட்டுவதாகவே சொல்லப்படுகிறது. எடுத்துக் கொள்ள விரும்பும் பொருள்களை வாகனக்காரர்களிடம் மிகவும் தன்மையாகக் கேட்டு ''அனுமதி'' பெற்றபின்பே அவர்கள் எடுத்துக் கொள்வதாகவும் சொல்லப்படுகிறது. எனினும் கேட்டுக்கொடுக்க மறுத்த பல வாகன உரிமையாளர்களது பொதிகள் கண்டதுண்டமாக வெட்டப்பட்டும் கவிழ்த்துக் கொட்டி இறக்கி ஏற்றியும் பெரிய சீரழிவுகளைச் சந்திக்க நேரிடுகிறதாம். இதற்கு அஞ்சி பல வாகனச் சாரதிகள் கேட்க முன்னரே பொருள்களைத் ''தானம் பண்ணி விட்டுத்'' தமது முதலாளிமாரிடம் திட்டு வாங்க வேண்டிய நிலை உண்டாகி வருகிறது. இவ்வாறாக வவுனியாவின் பாதுகாப்புக் கெடுபிடிகள் மக்களை இடுக்கிப் பிடியாக அவலப்பட வைத்திருக்கின்றன. ★

## மோதல்களிலும் விபத்திலும் நான்கு புலிகள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

படையினருடனான மோதல்களிலும், தற்செயலாக ஏற்பட்ட வெடி விபத்திலும் நான்கு புலி உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர்.

இயக்கச்சி மற்றும் முகாவில் பகுதிகளில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதல்களின் போது தமது தரப்பில் இருவர் உயிரிழந்தனர் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி இயக்கச்சியில் இடம்பெற்ற மோதலில் சோள நிலவன் என்று அழைக்கப்படும் முத்தையா கிருபாகரனும்(கிருஷ்ணபுரம், கிளிநொச்சி), கடந்த 13ஆம் திகதி முகாவில் பகுதியில் இடம் பெற்ற மோதலில் லெப்டினன்ட் கேணல் புவிதா என்று அழைக்கப்படும் நடேசு நிர்மலாதேவியும் (பூநகரி) உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

உமையாள் புரம் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தவறுதலான வெடி விபத்தின் போது இரண்டு புலி உறுப்பினர்கள் உயிரிழந்தனர்.

2ஆம் லெப்டினன்ட் கயல் சோளன் என்று அழைக்கப்படும் சிவநாதன் ஆனந்தன் (திருமலை), மதியரசன் என்று அழைக்கப்படும் இரட்ணம் இன்பராஜ் (யாழ்ப்பாணம்) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்) (இ-9)

**நாளை**

மாசி 5

வியாழக்கிழமை

திதி: திரயோதசி

பின்னிரவு 2.17 வரை.

நட்சத்திரம்: புநர்பூசம்

பிற்பகல் 1.54 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 8.03—9.33

ராகுகாலம்: 2.03—3.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

கொழும்புத்துறை, பெப். 16

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயச் சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ''பக்திப்பாடல்'' நிகழ்வைப் பக்கவாத்திய சகிதம் வில்லிசைப் புகழ் க. சத்தியதாஸ் நிகழ்த்துவார்.

நிகழ்வுக்கான அறிமுக உரையை இளைப்பாறிய ஆசிரியர் சி. நவரத்தினம் நிகழ்த்துவார். (க-30)

**உதய வாக்கு**

மணிக்கணக்கில் போதனை செய்வதிலும் ஒரு கணப்பொழுது உதவி புரிந்தாலே நலம்.

-சீனப் பழமொழி

## ஒருவர் கைது

அரியாலையில் ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ஒருவர் வீட்டில் இடம்பெற்றதான திருட்டுச் சம்பந்தமாக அந்த இடத்தைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட பொருள்கள் மீண்டும் வீட்டில் போடப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் குறிப்பிட்ட சந்தேக நபரைக் கைது செய்தனர். (இ-86)

## கூ. சபையின் மனைப்பொருள் பயிற்சிநெறி

திருநெல்வேலி, பெப். 16

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் இந்த வருடத்துக்கான மனைப்பொருளியல் டிப்ளோமா பயிற்சி நெறி கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது.

அடிப்படை பயிற்சி நெறியில் பங்குபற்றி பயிற்சிபெற்றவர்களான 50 யுவதிகள் இப்பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட கூட்டுறவு மகளிர் குழுத்தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில் பிரதம அதிதியாக யாழ். பிரதேச செயலர் க. செந்தில் நந்தனன் கலந்து கொண்டு பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்தார். மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி வேதவல்லி செல்வரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார். யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி, செயலாளர் தி. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

(இ-10-86-135)

## கட்டுரைப் போட்டி

திருநெல்வேலி, பெப். 16

அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு நல்லூர் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் கட்டுரைப்போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

''யாழ்ப்பாணத்தில் இன்றைய மகளிர் நிலை'' என்ற தலைப்பில் தரம் 10, தரம் 11 மாணவர்களுக்கும், ''அபிவிருத்தியில் மகளிர் பங்கு'' என்ற தலைப்பில் தரம் 12, தரம் 13 மாணவர்களுக்கும் இந்தகட்டுரைப்போட்டி நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-135)

## நாதவாஹினி மலர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், பெப். 16

இராமநாதன் நுண்கலைக் கழகக் கவின்கலைமன்றத்தின் நாதவாஹினி மலர் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு செல்வி சியாமளா பாலசிங்கம் தலைமையில் இராமநாதன் நுண்கலைக் கழகக் கலையரங்கில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நூலை வெளியிட்டு வைப்பார்.

நூல் அறிமுகவுரையை இசைத்துறைத் தலைவர் ந. வி. மு. நவரத்தினமும், ஆய்வுரையை பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயரும் நிகழ்த்துவார். (இ-க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவனையில் உள்ள தரமான M.D 90 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. மாலை 5 மணிக்குப் பின் பார்வையிடலாம். தொடர்பு:- N. பத்மதேவா சுதுமலைச்சந்தி, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய். T. P. No. 3406. (73701)

### கல்வி

இணைந்த கணிதம் பாடத்திற்குரிய ''நிழ்ந்தகவு'' பாடநூல் வெளிவந்துள்ளது. ஆசிரியர்: சி. துரையப்பா, பிரபல்யமான புத்தக சாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். (73680)

இணைந்த கணிதம் பாடத்திட்டம் [கற்றல், கற்பித்தல் ஒழுங்கு] பெற விரும்புவோர் 10 ரூபா பெறுமதியான முத்திரையினையும் முகவரியினையும் அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய முகவரி:- S. Thuraiappah. No-26 B, Mallika Lane, Wellawatta. (73679)

## பாவனைக்கு உதவாத பொருள்கள்

நெடுந்தீவுப் பகுதியில் உள்ள வியாபார நிலையங்களில் பாவனைக்கு உதவாத நிலையில் இருந்த பிஸ்கட் அப்பளம் போன்ற பொருள்கள் நெடுந்திவுப் பொதுச்சுகாதாரபரிசோதகரால் அழிக்கப்பட்டன. (இ-111)

### தவறிவிட்டது

சின்னப்பு நல்லையா ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (360991660V) ஆனைக்கோட்டையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஸ்ரீலங்கா வீதி, உடுவில், சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (73699)

மாகியப்பிட்டி. சண்டிலிப்பாயைச் சேர்ந்த கௌசிலியா சிறிஸ்கந்தராஜா என்பவரின் விசேட அடையாள அட்டை (0905028486) 01-02-2000 அன்று சண்டிலிப்பாய் சிரணி சந்திக்கும், வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (73684)

அருள் வைத்தியசாலை கந்தரோடை வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த அருளப்பன் மரிய கொறற்றி என்பவரது தேசிய அ. அ இல. (658580446V), விசேட அ.அ. (இல. 0906019764) ஆகியவை 05-02-2000 அன்று யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில்தயவு செய்துஒப்படைத்து உதவவும். (73689)

### புதுவருஷப் பலன்

எங்கும் விற்பனையாகின்றன. 12 இராசிகளின் பலாபலன்கள். வேலணை சோதிடர் V. A. சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். உங்கள் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் சந்தித்துப் பாருங்கள். [73652]

### ஜோதிடம்

கல்வியில் உயர்சித்திபெற, பிரச்சினையற்ற திருமண வாழ்வு, நோய்களைத் துரித கதியில் அகற்றல் ஆகியவற்றுக்கு நாட வேண்டியஇடம் அபூர்வஜோதிட நிலையம், No. up - 304, ஆலடிச்சந்தி, சுந்தர்மடம். (73688)

### தவறிவிட்டது

சாவகச்சேரிக்கும் சங்கத்தானைக்கும் இடையில் கண்டி வீதியில் யமகா மோட்டார் சைக்கிள் திறப்பு கீ-ரெக்குடன் 12—02—2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சங்கத்தானை பிரியங்கா மல்ரி சொப்பில் ஒப்படைத்து உதவவும். (சி/11028)

முருகன் கோயில் துணவி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அமிர்தலிங்க சர்மா பத்மநாதன் என்பவரின்) தே.அ.அ.இல.(770074681V அளவெட்டிக்கும், தெல்லிப்பழைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (73704)

---

## 5 ஆம் ஆண்டு நிறைவையொட்டிய மறைந்தும் மணம் பரப்பும் மணிவதனன் ஞாபகார்த்த மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி-2000

### மணி வீடியோ ஆதரவில்

9 பேர் கொண்ட 15 பந்து பரிமாற்றங்களாக இப்போட்டி அமையும்.

**விண்ணப்ப முடிவுதிகதி 29 - 02 - 2000**

யாழ். நகரிலே இதுவரை நடைபெறாத வகையில் பிரமாண்டமாக இச்சுற்றுப்போட்டி அமையும் என்பதை அணிகளுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

★ போட்டிக்கான சிறப்புப் பரிசில்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஆட்டத்தொடர் நாயகன் | ரூ. 1,000 |
| 2. | ஆட்டத்தின் கதாநாயகன் | ரூ. 750 |
| 3. | சிறந்த துடுப்பாட்ட வீரன் | ரூ. 500 |
| 4. | சிறந்த பந்து வீச்சாளர் | ரூ. 500 |
| 5. | சிறந்த பந்து காப்பாளர் | ரூ. 500 |
| 6. | சகல துறை வல்லுநர் | ரூ. 500 |

ஒவ்வொரு ஆட்டத்தின் போதும் சிறந்த ஆட்ட நாயகன் தெரிவு செய்யப்படுவார்.

இப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெறும் அணிக்கு சுற்றுக் கேடயமும் 1000 ரூபா பணமும் வழங்கப்படும்.

2 ஆம் இடத்தைப் பெறும் அணிக்கு சுற்றுக்கேடயமும் 750 ரூபா பணமும் வழங்கப்படும்.

விண்ணப்பப்பத்திரங்கள் கிடைக்கும் இடம்:

- நரேன் வீடியோ, வீரமாகாளி அம்மன் கோயிலடி.
- மணி வீடியோ ஹேரம், 52, மாட்டின் வீதி
- பொருளியற் கல்லூரி, 200, பிரதான வீதி

விளம்பர அன்பளிப்பு:
அழகு நகைகளின் அரங்கம்
**சாணுகா ஜுவலர்ஸ்**
கஸ்தூரியார் வீதி,
உரிமையாளர்: V. ஜெயசீலன் (73709)

---

## மணிவதனன் ஜெயசித்திரா ஞாபகார்த்த 5 ஆம் ஆண்டு பூப்பந்தாட்டம் (Badminton)

விண்ணப்ப முடிவு திகதி: 16 - 02 - 2000
பூப்பந்தாட்டப் போட்டிகள்: 18 - 02 - 2000 வெள்ளி மாலை 2மணி.
ஆரம்ப இடம்: பரியோவான் கல்லூரி முன் அரங்கு.
விண்ணப்பப்படிவம் கிடைக்குமிடம்: Y. M. C. A. யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு:
**நியூ சுவர்ண மகால் ஜுவல்லர்ஸ்,**
172, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(73717)

---

## லயன்ஸ் கழகம் - சுன்னாகம்

# மூக்குக் கண்ணாடி வழங்கும் திட்டம்

### மார்ச் மாதம் 2000

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் எதிர்வரும் மார்ச் மாதம் பார்வைக் குறைபாடுடையவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மூக்குக் கண்ணாடி பெற விரும்பும் பார்வைக் குறைபாடுடைய ஆண்கள், பெண்கள், பாடசாலை செல்லும் மாணவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள சுன்னாகம் லயன்ஸ் கழக அங்கத்தவர்களிடம் தங்களது பெயர் விவரங்களை எதிர்வரும் 29 - 02 - 2000-க்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.

மூக்குக் கண்ணாடி கோரி முன்னர் விண்ணப்பித்தவர்களும் மீண்டும் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளத் தவறாதீர்கள்.

### பதிவு செய்யும் கழக அங்கத்தவர்கள் பெயர் வருமாறு:-

| | |
|---|---|
| 1. லயன். என். அரசரத்தினம் | நாகம்ஸ் பாட்டா, சுன்னாகம். |
| 2. லயன். ரி. குகதாசன் | விவசாயக் கல்லூரி, மருதனார் மடம். |
| 3. லயன். ஏ. மகாலிங்கம் | பிரதேச செயலர், உடுவில். |
| 4. லயன். எஸ். பி. சிவஞானம் | சட்டத்தரணி, சுன்னாகம். |
| 5. லயன். சேது. விபுலானந்தா | (சூட்டி மாஸ்ரர்) சுன்னாகம். |
| 6. லயன். ஏ. நல்லதம்பி | மானிப்பாய் வீதி, உரும்பிராய். |
| 7. லயன். எஸ். சச்சிதானந்தம் | கி. சே. அலுவலர், மல்லாகம். |
| 8. லயன். செ. யோகானந்தராசா | ச. சே. அலுவலர், சுன்னாகம். |
| 9. லயன். வீ. எம். இராமலிங்கம் | கி. சே. அலுவலர், சுன்னாகம். |
| 10. லயன். கே. கைலைநாதன் | ஓய்வுபெற்ற ஆசிரியர், மல்லாகம். |
| 11. லயன். ஏ. நற்குணநாதன் | மானிப்பாய் றோட், உடுவில். |
| 12. லயன். கே. முருகானந்தன் | மல்லாகம். |
| 13. லயன். செல்லப்பா நடராசா | கோண்டாவில். |
| 14. லயன். வி. எஸ். சீவரத்தினம் J. P. | கந்தரோடை, சுன்னாகம். |
| 15. லயன். ரி. அரியரத்தினம் | கே கே எஸ். வீதி, கோண்டாவில். |
| 16. லயன். ஜி. கருணாநிதி | உரும்பிராய். |
| 17. லயன். டாக்டர் கே. சிவராசா | ஆயுள்வேத வைத்தியசாலை, பிரதேச சபை, ஏழாலை. |
| 18. லயன். டாக்டர் வி.யோகேஸ்வரன் | அரசினர் வைத்தியசாலை, அளவெட்டி. |
| 19. லயன். கே. திருநாவுக்கரசு | கி. சே. அலுவலர், கந்தரோடை. |
| 20. லயன். கே. நாகலிங்கம் | கொக்குவில் கிழக்கு, கொக்குவில். |
| 21. லயன். பி. சுந்தரலிங்கம் | சட்டத்தரணி, அளவெட்டி. |
| 22. லயன். எஸ். பி. நடராசா | அண்ணா தொழிலகம், இணுவில். |


லயன். என். அரசரத்தினம்
தலைவர்,
சுன்னாகம லயன்ஸ் கழகம்.

(73714)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 12 — 06 — 1918



மறைவு 17 — 01 — 2000

### அமரர் சுப்பிரமணியம் அம்பலவாணர்
(சட்டத்தரணி)

எங்கள் இதயத் தீபமே! எங்கள் இதயக் கோயிலிலே வீற்றிருந்து
இறுதிவரை ஒளிதருவீர்கள் என்றிருந்தோம்!
ஆனால் இடைவழியில் எங்களை இருளிலே தவிக்கவிட்டு
எங்கள் அப்பாபிரிந்து சென்ற மாயம் தானென்னவோ?
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் மதிமுகம்
என்றும் எங்கள் நெஞ்சை விட்டு நீங்காது.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
புத்தூர் கிழக்கு, புத்தூர். (73724)

பாசமுள்ள அன்னையின்

## ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி ஞானமணி தம்பிஐயா

மலர்வு 18—02—1944

உதிர்வு 26- 02—1999

அன்பின் இருப்பிடமே! பண்பின் சிகரமே!!
பாசத்தின் உறைவிடமாய்
எம்மையெல்லாம் வளர்த்தெடுத்த அம்மாவே!
ஆண்டொன்று சென்றாலும் ஆறுமோ எங்கள் துயர்?
அம்மா என்றழைக்க எப்பிறப்பில் காண்போம் நாம்?

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

'யோக மஹால்',
எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ். (73651)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## செல்வி பொன்னம்பலம் லோகேஸ்வரி

தோற்றம்: 26—10—1961

மறைவு: 17—01—2000

''ஒரு கணப் பொழுதில்
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாப் பயணம் சென்றதேனோ?

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

17-01-2000 அன்று இறைவனடி சேர்ந்த எமது மகளின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டும் கடிதம், தந்தி, தொலைபேசி மூலமும் வேறு பல வழிகளிலும் உதவி செய்தும் எமது துயரத்தில் பங்குகொண்ட உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் சுழிபுரம் மேற்கில் அமைந்துள்ள எமது இல்லத்தில் இன்று (16-02-2000) புதன்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

- குடும்பத்தவர்கள்

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (சி/11015)

## ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி தினம்

யாழ்ப்பாணம், பெப். 16

வைத்தீஸ்வராக் கல்லூரி இந்துமாமன்றம் நடத்தும் இராமகிருஷ்ண ஜெயந்தி தினம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 9–30 மணிக்கு கல்லூரியின் விவேகானந்தர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-7)

## காணாமற்போனவர் ஈ.பி.டி.பி. அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், பெப். 16

காணாமற் போனதாகத் தெரிவிக்கப்பட்ட தனது மகன் தற்போது ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் இருப்பதாக அவரது தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

உசன் மிருசுவிலைச் சேர்ந்த கந்தசாமி ஜீவாஸ் (வயது 16) என்ற இளைஞனே ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் இருப்பதாக அவரது தாயார் நேற்றுத் தெரிவித்தார்.

இவர் கடந்த 28 ஆம் திகதி காணாமற் போனதாக ஆணைக்குழு அலுவலகத்தில் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ-9)

## கொழும்புத்துறைப் பகுதி மக்கள் வீடுகளுக்குத் திரும்புகின்றனர்

அரியாலை, பெப். 16

கரையோரப் பகுதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களை அடுத்து ஏற்பட்ட பதற்றநிலை காரணமாக கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் பலர் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

கொழும்புத்துறை ஜே-61, ஜே-62 ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 610குடும்பங்கள் முற்றுமுழுதாக இடம் பெயர்ந்திருந்தன.

இவர்களில் இதுவரை 45 குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளன.

இதேவேளை —

ஆனந்தன் வடலி, துண்டி, வளன்புரம், அரியாலை, தபால்கட்டைச்சந்தி போன்ற பகுதிகளிலும் மக்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்கின்றனர்.

பாஷையூர்ப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பகல்வேளையில் தமது இருப்பிடங்களுக்குச் சென்று தங்கிய பின் இரவு வேளையில் ஈச்சமோட்டை, பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குழிப் பகுதிகளுக்கு வந்து தங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-17-8)

## 9 வருடத்தின் பின் மீண்டும் இயங்கும் பாடசாலை

மண்கும்பான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஒன்பது வருட கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த 1991 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மக்கள் இடம்பெயர்வை தொடர்ந்து இந்தப்பாடசாலைமூடப்பட்டது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற இதன் திறப்பு விழாவில் பிரதம அதிதியாக வேலணை உதவி அரசாங்க அதிபர் செ.இரத்தினம் கலந்து கொண்டு பாடசாலையைதிறந்துவைத்தார்.

தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வ. இராதாகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.இப் பாடசாலையின் அதிபராக க. குமரேஸ்வரநாதன் பொறுப்பேற்றுள்ளார்.

(இ–135)

# ஆங்கிலம், கணனி பயின்றே உலகின் வளர்ச்சியுடன் நாம் போட்டியிட முடியும்

## பரிசளிப்பு விழாவில் பங்குத் தந்தை உரை

குருநகர், பெப். 16

உலகம் இன்று கிராமமாக மாறி வருகிறது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி காரணமாக உலகம் குறுகிவிட்டது. எமது மக்களும் விழிப்புணர்ச்சி பெறவேண்டும். ஆங்கிலம், கணனி ஆகியவைகளை நாம் அவசியம் கற்கவேண்டும்.அப்போதுதான் உலகின் வளர்ச்சியுடன் நாமும் போட்டி போட்டு முன்னேற முடியும்.

குருநகர் சமூகசேவை அமைப்பின் ஜேர்மன் கிளை, குருநகர் கலை அரங்கில் நடத்திய பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய குருநகர்ப் பங்குத் தந்தை அருள்திரு. பி. எவ். பொனிபஸ் மேற்கண்டவாறு கூறினார்.

திருமதி யூஜின் யூலியஸ் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் புனித மரியாள் வித்தியாலயத்தின் இளைப்பாறிய அதிபர் சி. தார்சிசியஸ்,, குருநகர் கிராம உத்தியோகத்தர் ஆர். அன்ரனி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டார்கள்.

அருட் தந்தை பி. எவ். பொனிபஸ் மேலும் பேசுகையில் குருநகரில் கல்வி தற்போது வளர்ச்சியடைந்து வருகிறது. எமது ஊரிலுள்ள அமைப்புக்களும் வெளிநாடுகளில் உள்ள எமது மக்களும் இந்த வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருகிறார்கள். அவர்களுடைய உழைப்பில் கிடைக்கும் உதவி இங்குள்ள பல அமைப்புகளினூடாகக் கல்வியில் திறமை காட்டும் மாணவ மாணவிகளுக்குக் கிடைத்து வருகிறது.

எனவே எமக்கு உதவ எமது மக்கள் உள்ளார்கள் என்பதை உணர்ந்து எமது மாணவ, மாணவிகள் கல்வியில் தொடர்ந்து மேலும் முன்னேற — தங்களை உயர்த்த — முயற்சிக்க வேண்டும்— என்றார்.

### கல்வியை முன்னேற்ற வேண்டும்

யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் சி. தார்சிசியஸ் பேசுகையில் கூறியதாவது:

எமது ஊரில் கலை, கலாசாரம், விளையாட்டு ஆகியவை முன்னர் மிகவும் வளர்ச்சியடைந்து காணப்பட்டன. ஆனால் தற்போது இவை முன்னர் இருந்தது போல உயர்வாக இல்லை. முன்னர் உதைபந்தாட்டத்தை எடுத்துக் கொண்டால் பாடுமீன் விளையாட்டுக் கழகம் என்றால் குருநகர் என்று உலகெங்கிலும் உள்ள மக்கள் தெரிவிப்பர். ஆனால் இன்று எமக்கிடையே ஒற்றுமை குறைந்து வருகிறது.

கல்வியை முன்னேற்ற வேண்டும் என்று நாம் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் கண்ட கனவு இன்று புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் நனவாகியுள்ளது.

யாழ். சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயம், யாழ். சென் ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளையும் இணைப்பதன் மூலம் எமது ஊரில் கல்வியை உயர்த்த முடியும் என அன்று நினைத்து அது தொடர்பாக பலருடனும் கதைத்தோம். இன்று இரு பாடசாலைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த இணைப்பு மூலம் எமது ஊரிலேயே உயர்தர வகுப்பில் மாணவ, மாணவிகள் இணைந்து கல்வி கற்கக் கூடிய நிலை உருவாகியுள்ளது. வெளிநாடுகளிலுள்ள எமது ஊர் மக்கள் தமது உதவிகளைப் பல்வேறு பெயர்களில் இங்கு அனுப்பி வருகிறார்கள்.

பிரான்ஸ் கல்விக்கழகம், சுவிஸ்கல்விக்கழகம், ஜேர்மன் கல்விக்கழகம் என இங்கும் இவை பிரிஷ்பட்ட நிலையில் இயங்கி வருகின்றன. இந்த அமைப்புக்கள் யாவும் ஒரே தலைமைத்துவத்தின் கீழ் இணைந்து ஒன்றுபட்டு இயங்கினால் எமது ஊர் மேலும் முன்னேற்றமடையச் சந்தர்ப்பம் ஏற்படும்—என்றார்.

### சிறப்பான வரலாறு உண்டு

குருநகர் கிராம உத்தியோகத்தர் ஆர். அன்ரனி தமது உரையில் கூறியதாவது:-

எமது ஊருக்கென்று சிறப்பான வரலாறு உண்டு. அவைகளை நாம் ஆவணப்படுத்த முயற்சிக்க வேண்டும். இன்று எமக்குக் கிடைக்கும் பல்வேறு உதவிகளையும் நாம் ஒன்றுபட்ட அமைப்பின் மூலம் செயற்படுத்த முனைய வேண்டும்.

எமது ஊரில் கல்வி கற்ற சிலர் எமது ஊரில் இருக்கப் பிடிக்காமல் வேறு இடங்களில் சென்று குடியேறி உள்ளார்கள்.

எமது படித்தவர்கள் தாம் கற்ற கல்வியை எமது ஊரில் இருந்துபயன்படுத்த முன் வர வேண்டும்—என்றார்.

இந்த அமைப்பின் தலைவர் திருமதி யூஜின் யூலியஸ் தமதுரையில் கூறியதாவது:-

வடக்கில் யுத்த சூழ்நிலை உருவாகுவதற்கு முன்னர் எமது ஊரில் வசித்தவர்கள் கடலையே நம்பி வாழ்ந்தனர். கடலில் இருந்து கிடைத்த வருவாய் மூலம் எமது ஊர் வளர்ச்சியடைந்தது. இக்காலத்தில் கடலில் இருந்து பிடிக்கப்பட்ட மீன், இறால், கணவாய் போன்றவைகளும் மற்றும் பல கடலுணவுகளும் பதனிடப்பட்டு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

யுத்தம் காரணமாக எமது மீனவர்கள் கடலில் தொழில் செய்ய முடியாத சூழ்நிலை உருவானது. எமது உடன் பிறப்புக்கள் கடலில் கொல்லப்பட்டும், அவர்களது மீன்பிடி உபகரணங்கள் கடலில் அழிந்துபோன நிலையும் உருவானது. இதனால் எமது ஊர் இளைஞர்கள் தாம் பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு வெளிநாடுகளில் அகதிகளாக சென்று அங்கு குடியேறி வசித்து வருகிறார்கள்.

அவர்கள் அங்கிருந்தாலும் எமது மண்ணை நேசிப்பதன் காரணமாக எமது ஊரில் கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு போன்ற துறைகள் வளம் பெற எமக்கு நிதியை அனுப்பி வைக்கிறார்கள்.

இதன் மூலம் எமது ஊரில் கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு உதவக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படும் போது தொண்டர்களாக கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இதன் மூலம் நாம் ஊதியம் வழங்கக் கூடியதாக உள்ளது — என்றார்.

(இ- 51)

# வெளிமாவட்ட சிறைகளில் உள்ளோர்
# விரைவில் யாழ். நீதிமன்றுகளில் ஆஜர்

யாழ்ப்பாணம், பெப். 16

விசாரணைகள் எதுவும் இன்றி வெளிமாவட்டச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கைதிகள் அனைவரையும் யாழ். மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக யாழ். நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் சட்டமா அதிபர் திணைக்களம் துரிதமாக மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு எதுவித விசாரணைகளும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களையே இங்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் —

இவர்கள் அனுராதபுரம், வெலிக்கடை, களுத்துறை மற்றும் போகம்பர போன்ற சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் —

அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

வெளிமாவட்டச்சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவினர்களை இங்குள்ள நீதிமன்றங்களுக்கு மாற்று விசாரணை செய்யுமாறு கோரிப் பலரும் யாழ். மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9)

## கொழும்புத்துறை கிழக்கில் திருட்டுக்கள் அதிகரிப்பு

கொழும்புத்துறை, பெப்.16

கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் திருடர்களின் தொல்லை கடந்த சில நாள்களாக அதிகரித்து வருகிறது.

மக்கள் இடம்பெயர்ந்த பகுதிகளான கொழும்புத்துறை பிரதான வீதி, குறுக்குத் தெருக்கள் ஆகியவற்றிலேயே திருட்டுக்கள் இடம்பெற்று வருகின்றன. வீடுகளில் கதவுகள், மின்சார உபகரணங்கள், தையல்மெஷின்கள், கூரை ஓடுகள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் உட்பட பெறுமதிமிக்க பொருள்கள் பட்டப் பகலில் திருடப்பட்டு வருகின்றன.

அத்துடன் சில வீடுகளில் உள்ள காணிகளில் அரிந்து வைக்கப்பட்டிருந்த கொங்கிறீட் கல்லுகளும் திருடப்பட்டுள்ளன.

வீடுகளைப் பார்வையிடச் செல்வது போலப் பாசாங்கு செய்து விஷமிகள் சிலர் திருட்டில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் இடம்பெயர்ந்த மக்கள்தெரிவிக்கின்றனர். (இ-30)

உ

## இன்று அவதாரநாள் காணும்

ஏழாலை

## அவதாரநாயகி வசந்தகுமாரி அம்பிகை

புத்தாயிரம் ஆண்டில் அழகுற ஆலயம் அமைத்தும் பாரெல்லாம் புகழ் பரப்பி பக்திதனைப் பரப்பி பக்தர்கள் மனதைக் கொள்ளை கொள்ளும் அன்பும் அல்லலுற்று வரும்போது துயர் துடைத்தும் பிறவிப்பிணி நீக்கியும் கேட்பவருக்கு கேட்ட வரம் கொடுத்தும், பிறவி நோய் வறுமை நீக்கியும் ஊனமுற்றோருக்கு உதவியும் ஏழைச்சிறார்களுக்கு கல்வி, ஊண, உடை கொடுத்தும் பசித்தோருக்கு அன்னக்கொடையும் முதியோருக்கு உதவியும் கலைஞருக்கு ஊக்கமும் அந்தணருக்கு தான தர்மமும் கொடுத்து ஆலயப்பணி செய்து பாரெல்லாம் சைவம் வளர உழைக்கும் நாயகியின் அருள் பரவவும் பணிமேலோங்கவும் வாழ்த்தி வணங்கும்-

தியாக. கெங்காதரக் குருக்கள்
புன்னாலைக்கட்டுவன்.

(73698)

## மாவட்ட மட்ட இலக்கியப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.16

'யுனெஸ்கோ' நிகழ்ச்சித் திட்டத்தின் அனுசரணையுடன் ஐந்து கல்வி வலயங்களையும் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளில் வலய மட்டத்தில் முதல் இடம் பெற்றவர்களுக்கான மாவட்ட மட்டப் போட்டி இம்மாதம் 26ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் சித்திரம், சங்கீதம், கட்டுரை, நடனம், நாடகம் என்பன சாந்தி, சமாதானம், சகிப்புத் தன்மை ஆகியவற்றை வலியுறுத்துவனவாக அமைந்திருந்தன.

இவற்றில் முதல் இடத்தைப் பெற்ற போட்டியாளர்களும், குழுக்களும் மாவட்ட மட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன.

(ஐ-10-133)

## திருப்பணி வேலைகள்

யாழ்ப்பாணம், பெப். 16

புலோலி மேற்கு, வாணர் குடியிருப்பு, சொக்கன் கலட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயம் கடந்த ஜனவரி 26 ஆம் திகதி அத்திவாரம் இடப்பட்டு விநாயகர், அம்பாள் முருகப்பெருமான், நாகதம்பிரான், வைரவர் போன்ற பரிபாலன மூர்த்திகளின் கட்டடத் திருப்பணி வேலைகள் இடம்பெறுகின்றன.

(க)

# நல்லூர் பிரதேச செயலகத்தில் 2 ஆம் கட்டக் கொடுப்பனவு
## திங்கள் முதல் வழங்கப்படும்

வலி.கிழக்கு, பெப். 16

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அசையும் அசையாச் சொத்துக்கள் சேதமுற்றோருக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபாவின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபா 135 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வங்கிகளில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும்—

இப்பணத்தினைப் பெற்று உடன் வீட்டு புனரமைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்யுமாறும் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-180)

## பாராட்டும் கௌரவிப்பும்

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந் தோறும் வெளியிடப்படும் ''ஞானச்சுடர்'' மலருக்கு ஆக்கங்களை வழங்கிய சமயப் பெரியோர்களையும் அறிஞர்களையும் பாராட்டும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

ஞானச்சுடரின் 3 ஆவது ஆண்டின் முதலாவது மலர் வெளியீட்டின் போது இவர்கள் பாராட்டப்பெற்றனர்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் கீழ்க்காணும் 13 சமயப் பெரியோர்களுக்கும் கௌரவவிருதுகள் வழங்கப்பட்டன.

இவர்களைப் பாராட்டுகின்ற நிகழ்வு பேரவையின் தலைவர் சி. நாகலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள் பின்வருவோர்களுக்கு கௌரவவிருது வழங்கிச் சிறப்பித்தார்.

அவ்வாறு பாராட்டப்பட்டோர் விவரம் வருமாறு:-

. சிவத்திரு. வ. குமாரசாமி ஐயர், பண்டிதர் தி. பொன்னம்பலவாணர், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், சிவத்தமிழ் வித்தகர் எஸ். சிவமகாலிங்கம், சமூக ஜோதி கா. கணேசதாசன் ஜே.பி., புலவர் வை. க. சிற்றம்பலம், புத்தொளி ந. சிவபாதம். ச. விநாயகமூர்த்தி (போதனாசிரியர்), சி. சி. வரதராசா, க. வேணுகோபால் இளைப்பாறிய அதிபர், சி. க. சிற்றம்பலம், சிவசண்முக வடிவேல், சி. நடராசா.

(இ-30)

## வரியப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள் சித்திரத்தேர் வெள்ளோட்டச் சிறப்பு மலர்

(மூன்றாம் பக்கத் தொடர்)

போது பல வகையான அமைப்புகளுடன் கூடிய பெரிய ஆலயமாக விளங்குகின்றது.

அன்னையின் அருட்பிரவாகத்தினாலும் அடியார்களின் விடாமுயற்சியினாலும் திருவெம்பாவை, நவராத்திரி, வருடாந்தப் பொங்கல் என்னும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வந்த இவ்வாலயம் இவ்வாண்டு மாசிமகத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு வருடாந்த மகோற்சவம் நடைபெற அன்னையின் அருள்பூத்திருக்கின்றது.

இதனையொட்டி இவ்வாலயத்துக்கென பல இலட்ச ரூபா செலவில் புத்தூர் ஸ்ரீ காளிகா சிற்பாலயத்தின் ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ செ. பாலசந்திரன் தலைமையில் உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறும் வேளையில் நாமும் அன்னையின் பேரருளை வேண்டி நிற்கின்றோம்.



(சி/19982)

# முன்னுரிமை அடிப்படையில் மேலும் 113 பேருக்கு தொலைபேசி இணைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ். குடாநாட்டில் மேலும்113 பேருக்குமுன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி இணைப்புக்கான அனுமதி கிடைத்துள்ளது.

புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் ஜனவரி மாதம் 27ஆம் திகதிய கூட்டத்திலேயே இவர்களுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியலை இன்று முதல் யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள 'உதயன்' பணிமனையில் அல்லது கே.கே.எஸ். வீதியில் உள்ள ப.நோ.கூ.ச. புதிய கட்டடத்தில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தில் அல்லது யாழ். செயலகத்தில் இயங்கும் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை அலுவலகத்தில் பார்வையிடலாம். (இ-க)

# காணாமற்போன அரச ஊழியரின் சம்பளத்தை பெற்றுத்தர ஏற்பாடு

## விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.16

1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் காணாமற்போன அரச ஊழியர்களின் சம்பளத்தினை அவர்களது குடும்பத்திற்கு பெற்றுக்கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமல் போன அரச ஊழியர்கள் தொடர்பான விவரங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கைதாகிக் காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கத்தை கேட்டிருக்கிறார்.

காணாமற்போன அரச ஊழியர்களின் குடும்பங்கள் உடனடியாக சங்கத்தின் தலைவர் எஸ்.செல்வராசாவுடன் தொடர்புகொண்டு மேற்படி விவரங்களை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# கஞ்சா வைத்திருந்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்

நெல்லியடி,பெப்.16

சட்டவிரோதமான வகையில் 70 கஞ்சா செடிகளை வீட்டில் வளர்த்து வந்ததுடன், பதனிடப்பட்ட 140 கிராம் கஞ்சாவையும் வைத்திருந்த ஓய்வூதியர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் ஏ.ச.ஏகநாதன் உத்தரவிட்டார்.

புலோலி உபயகதிர்காமப் பகுதியில் உள்ள இவரது வீட்டை சோதனை செய்த பருத்தித்துறை மதுவரி நிலைய பிரதம பரிசோதகர் என்.சோதிநாதன், மதுவரி காவலர் எஸ்.சிவஞானம் ஆகியோர் இவற்றை மீட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர் நேற்றுமுன்தினம் காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இரு குற்றங்களுக்காக தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ-109)

# மேலும் 9 மின்பிறப்பாக்கிகள் கப்பலில் எடுத்து வரப்பட்டன

யாழ்ப்பாணம்,பெப்.16

குடாநாட்டின் மின்சார விநியோகத்தை சீர்செய்யும் நோக்கில் மேலும் 9 புதிய மின்பிறப்பாக்கிகள் 'கூல் எயார்' நிறுவனத்தால் எடுத்து வரப்பட்டுள்ளன.

காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் 'லங்கா முடித்த' கப்பலில் இருந்து இந்த மின்பிறப்பாக்கிகளை இறக்கும் பணிகள் இடம்பெற்று வருவதாக இலங்கை மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிய மின்பிறப்பாக்கிகள் உடனடியாகப்பொருத்தப்படும் பட்சத்தில் இன்னும் ஒரு மாதத்துக்குள் இந்த மின்பிறப்பாக்கிகளில் இருந்து மின்சாரத்தைப் பெறக்கூடியதாக இருக்கும் என்றும் -

இதன் மூலம் நாவற்குழி, கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பகுதிகளுக்கு புதிதாக மின் இணைப்புகள் மேற்கொள்ளப்பட்டு அந்தப் பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.16

அராலியூர்சிற்பக்கலாநிதிவிஸ்வப்பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கத்தின் கலைப்பணியைப் பாராட்டி ஈழத்து நாதஸ்வரக் கலைஞர்கள் நடத்தும் பாராட்டுவிழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அராலிதெற்கு கரைப்பிட்டி விஸ்வேஸ்வர ஸ்ரீகாளிதேவி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் ஆசியுரையை நல்லை ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவார்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறையைச் சேர்ந்த கலாநிதி சி.க.சிற்றம்பலம்,திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய ஸ்தபதியார் கலாபூஷணம் ஆ.ஜீவரட்ணம், கலாசூரி என்.கே.பத்மநாதன்,கவிஞர் சோ.பத்மநாதன், நா.சந்திரமோகன் ஆகியோர் பாராட்டுரைகளை வழங்குவர்.

விழாநாயகர் தங்கப்பதக்கம் அணிவித்தும், பொன்னாடை போர்த்தும் கௌரவிக்கப்படுவார். (ஐ-7)

## கிணற்றில் யுவதியின் சடலம்

நெல்லியடி,பெப்.16

இரவு வேளை வீட்டில் உறங்கப் போவதாகக் கூறிய இளம்யுவதி ஒருவர் மறுநாள் காலை அருகிலுள்ள பொதுக் கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் கரணவாயிலுள்ள முதலைக்குளி என்ற இடத்தில் நடந்துள்ளது.

கரணவாய் தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் நிரஞ்சினி (வயது 28) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது சடலம் மந்திகை மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு பிரேத பரிசோதனையை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும் பெருமாள் மேற்கொண்டார்.

மரணவிசாரணையை நடத்திய, பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் சு.பா.சுப்பிரமணியம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

நெல்லியடிப் பொலீஸாரும் கரணவாய் தெற்கு கிராமசேவை அலுவலரும் சாட்சிகளை நெறிப்படுத்தினார்கள். (ஐ-109)

## குடும்பஸ்தரை காணவில்லையென முறையீடு

மீசாலைப் பகுதியைச் சேர்ந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியரான சோமசுந்தரம் ஈழநேசன் (வயது 41) என்ற குடும்பஸ்தர் கடந்த 14ஆம் திகதி முதல் காணாமற்போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவதினம் சாவகச்சேரியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியையான இவரது மனைவியை இவர் பாடசாலைக்கு அழைத்துச் சென்றுவிட்டுத் திரும்பியதாகவும் -

அதன்பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என்றும் - முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம்,பெப்.16

ஏழாலை தெற்கு களபாவோடை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் ஆலய வசந்தகுமாரி அம்மன் ஜெயந்தி விழா இன்று புதன்கிழமை காலை 8மணியளவில் சிவத்திரு. குமாரசாமி ஐயா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் அபிஷேகம், பூசை, வேதபாராயணம் என்பன இடம்பெற்று, அந்தணர்கள், ஊனமுற்றோர் மற்றும் வசதி குறைந்தவர்கள், வயோதிபர்கள் ஆகியோருக்கு நன் கொடையும் வழங்கப்படும். (க)

# முத்திரைச்சந்தை சம்பவத்தில் சந்தேக நபருக்கு பிணை அனுமதி

## 25ஆம் திகதி மீண்டும் ஆஜராக உத்தரவு

யாழ்ப்பாணம்,பெப்.16

கடந்த 9ஆம் திகதி முத்திரைச் சந்தையில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலீஸாரால் யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நபர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே, சந்தேக நபரான நாயன்மார்க் கட்டைச் சேர்ந்த இரத்தினம் பாக்கியநாதன் (வயது 55) என்பவரை பிணையில் செல்ல நீதிவான் இ.த.விக்னராஜா அனுமதித்தார்.

அண்மையில் முத்திரைச்சந்தைப் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் கண்ணிவெடிச் சம்பவத்தின் போது, கிளைமோரை வெடிக்க வைப்பதற்கு வயர் பொருத்த உடந்தையாக இருந்தார் என்ற சந்தேகத்தில் இவர் கைது செய்யப்பட்டதாக பொலீஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் சந்தேக நபர் ஆஜர் செய்யப்பட்டபோது அவர் சார்பில் ஆஜராகி வாதிட்ட சட்டத்தரணி, கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்ட நேரம் சந்தேகநபர் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்ததாகவும் -

வீட்டுக்கு வெளியே குண்டு பொருத்தப்பட்ட வயர் எதனையும் அவர் கண்டிருக்கவில்லை என்றும் - வாதிட்டார்.

அதைத் தொடர்ந்து சந்தேக நபரை 5ஆயிரம் ரூபா காசுப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், எதிர்வரும் 25ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை - இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போது படையினரால் கைது செய்யப்பட்ட இவரது மகன் விசாரணைகளின் பின்னர் படையினரால் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே. (இ-9)

## ஓய்வுபெற்ற பிரதிஅதிபருக்கு பவளவிழா

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ்.இந்துக் கல்லூரியில் பிரதி அதிபராக இருந்து ஓய்வுபெற்ற க.சிவராமலிங்கம் அவர்களின் பவள விழா நிகழ்வுகள் விரைவில் இடம்பெற உள்ளன.

பவளவிழா தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்க யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் உப தலைவராக இரா.செல்வவடிவேலும் செயலாளராக கி.கிருபானந்தாவும் பொருளாளராக தி.சிவதட்சணாமூர்த்தியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவாகி உள்ளனர். (இ)

## உயிரிழப்பு

படையினருடன் இடம்பெற்ற மோதல்களில் தமது தரப்பில் இருவர் உயிரிழந்துள்ளதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி யாழ். குருநகர் பகுதியில் இடம்பெற்ற மோதலில் லெப்டினன்ட் பாப்பா என்றழைக்கப்படும் ஸ்ரீபாப்பா (யாழ்ப்பாணம்) என்பவரும் -

கடந்த 12ஆம் திகதி கோயிலாக்கண்டிப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் தணிகைச்சுடர் என்றழைக்கப்படும் நடராசா ராஜமோகன் (துணுக்காய் வீதி, மாங்குளம்) என்பவரும் உயிரிழந்ததாகப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-9)

## திருட்டு

சுன்னாகம் பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டுப் பொருட்கள் திருடப்பட்டன.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளி இரவு சுன்னாகம் ஸ்ரேசன் வீதியில் இடம்பெற்றது.

# நுவரெலியாவில் குண்டு கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப்.16

நுவரெலியாவில் உள்ள தனியார் பஸ் நிலையத்தில் அமைந்துள்ள மலசலகூடத்தில் இருந்து குண்டு ஒன்று கடந்த ஞாயிறன்று காலை கண்டுபிடிக்கப்பட்டது.

குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் வந்து குண்டைச் செயலிழக்கச் செய்தனர்.

அதே சமயம் - மாவனல்ல பஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்றில் அனாதரவான நிலையில் காணப்பட்ட பெட்டி ஒன்றினால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் அழைக்கப்பட்டு அந்தப் பெட்டி சோதனை செய்யப்பட்டது.

அந்தப்பெட்டிக்குள்பழங்கள் இருந்தது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

## திருமலையில் கோப்ரல் பலி!

திருகோணமலை மாவட்டம் மூதூர் ஜெயாவீதிப் பகுதியில் கடந்த ஞாயிறு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இராணுவக் கோப்ரல் ஒருவர் உயிரிழந்தார்; இரண்டு சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த சிப்பாய்கள் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (ஐ-7-150)

# புண்ணிய நாச்சியார் தின பண்ணிசைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ். சைவபரிபாலன சபையினரால் புண்ணிய நாச்சியம்மையார் குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட மேற்படி போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம்வெண்கலப்பதக்கம் ஆகியன வழங்கப்படவுள்ளன.

முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விவரம் வருமாறு:-

### கீழ்ப்பிரிவு

* முதலாம் இடம்: செல்வி தெ.பவனுஜா (மானிப்பாய் சோதி வேம்படி வித்.)

* இரண்டாம் இடம்: செல்வி ர.பிருகஸ்வினி (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)

* மூன்றாம் இடம்: சே.விதுர்சன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை)

### மத்தியபிரிவு

* முதலாம் இடம்: கு.ஜெகதீசன் (யூனியன் கல்லூரி)

* இரண்டாம் இடம்: அ.அமிர்தலோஜனன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

* மூன்றாம் இடம்: செல்வி. து.துஷ்யந்தினி (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி)

### மேற்பிரிவு

* முதலாம் இடம்: செல்வி ந.தனசொருபி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

* இரண்டாம் இடம்: ச.லக்மன் (யூனியன் கல்லூரி)

* மூன்றாம் இடம்: பு.நாகரஞ்சன் (மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை)

இவர்களுக்கான பதக்கம் சூட்டும் விழாவும் பரிசளிப்பும் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ஐ-7)

MILLENNIUM MUSICAL SHOW
புத்தாயிரம் ஆண்டு இன்னிசையருவி

இதன் நோக்கங்கள் நிறைவேற
நீங்கள் கொடுத்துதவிய நன்கொடை
'புத்தாயிரமாண்டு மருத்துவ மாணவர் நிதி'
என்ற வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
வருடாவருடம் அப்பணத்தின் வட்டியை
உபயோகிக்க நிர்ணயிக்கப்பட்டவர்கள்:-

மருத்துவபீடாதிபதி,
சத்திரசிகிச்சைத்துறைத் தலைவர்,
மருத்துவத்துறைத் தலைவர்.

பேராசிரியர் வி. குணானந்தம்,
மருத்துவபீடம்,
யாழ்ப்பாணம்.

(73712)

கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் ஊழியரும், பணியாளர் நலன்புரிச்சங்கத்தின் அங்கத்தவருமான வ.பிரபாகரனின் அன்புச் சகோதரி

செல்வி வல்லிபுரம் நிரஞ்சனி

13-02-2000 அன்று அகால மரணமடைந்தார். இவரின் திடீர் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

கரவெட்டி
பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்க பணியாளர் நலன்புரிச்சங்கம்.

(C/11035)

# நேற்று ஆராயப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கின்றன எனவும் - இவற்றில் 70வீத மான காடுகள் வடக்கு - கிழக்கு மாகாணத்திலே இருப்பதாகவும் இக் கலந்துரையாடலின் போது தெரிவிக் கப்பட்டது.

காணி, பிராந்தியங்களின் கட்டுப் பாட்டிலிருந்தாலும் மத்திய அரசுக்கு அதனைக் கண்காணிக்கும் அதிகா ரம் இருக்க வேண்டும் என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தேசிய வனவிலங்குகள், சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள், சிங்கராஜக் காடுகள் போன்றவை மத்திய அரசி டமே இருக்க வேண்டும் என்றும் அரசுத்தரப்பு வலியுறுத்தியது. எனி னும் தமிழ்க்கட்சிகள் அதனை ஏற் றுக் கொள்ளவில்லை.

இறுதியில் இது சம்பந்தமாக ஆராய்வதற்காக உப குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டது. இக்குழு இன்று கூடி இது தொடர்பாக முடிவு எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

நிதிவிடயம் தொடர்பாக ஆராயப் பட்ட போது வெளிநாட்டுக் கடன்கள், நன்கொடைகள் போன்றவை மத்திய அரசின் அனுமதியுடனே பெறப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்குத் தமிழ்க் கட்சிகள் தமது ஆட்சேபனையைத் தெரிவித்தன. இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படா மலே இவ்விடயம் ஒத்திவைக்கப்பட் டது.

ஆளுநர் நியமனம் தொடர்பாக ஆராயப்பட்டபோது, மாகாண முதல் வர்களின் கருத்துக்களை உரிய முறையில் பரிசீலனை செய்த பின் னர் ஜனாதிபதி அவரை நியமிக்க வகை செய்வதாக அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் முதல மைச்சர்களின் ஆலோசனையின் பேரிலேயே ஆளுநர்கள் நியமிக்கப் பட வேண்டும் என்று தமிழ்க் கட்சி கள் வலியுறுத்தின.

கல்விக் கொள்கையைப் பொறுத் தவரை கல்விக் கல்லூரிகள் தொடர் ந்து சில காலத்துக்கு மத்திய அர சின் கீழே இயங்கும் என்றும் பின்னர் பிராந்திய அரசுகளுக்குக் கீழே மாற் றப்படும் என்றும் தேசிய கல்லூரிகள் மத்திய அரசின் கீழே இயங்க வேண்டும் என்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இப்போதுள்ள பல்கலைக்கழகங் கள் மத்திய அரசின் கீழ் தொடர்ந்து இயங்கும் என்றும் பிராந்திய அரசுகள் புதிய பல்கலைக்கழ கங்களை நிறுவமுடியும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கல்விக் கொள்கை தொடர்பாக நீண்ட நேரம் ஆலோசனைகள் நடை பெற்றன. எனினும் முழுமையாக இணக்கம் காணப்படாத நிலையில் இவ்விவகாரம் குறித்து தொடர்ந்து பேசுவது என்று முடிவு செய்யப்பட் டது.

பிராந்திய சபைகளை பிரதிநிதித் துவப்படுத்தும் இரண்டாவது சபை யொன்று நாடாளுமன்றத்தில் அமைக்கப்பட வேண்டும் என்று தமிழ்க் கட்சிகளினால் இக்கலந்து ரையாடலில் வலியுறுத்தப்பட்டது. (அ-5)

## திருமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பரப்பில் மீன்பிடிப்பதற்கான தடை உத்தரவை கடற்படையினர் நேற்று விடுத்ததாக திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

இந்தத் தடை உத்தரவு தொடர் பான முக்கிய கூட்டம் ஒன்று நேற்று திருகோணமலை அரச அதிபர் எஸ். டி.சந்திரதாஸ தலைமையில் மாவட் டச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் முப்படை அதிகாரிகளும் மற் றும் சிங்கள - தமிழ் மீனவர் சங்கங் களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ஐ-7-21)

## தப்பியோடிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டுள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் இணை யும் இராணுவத்தினருக்கு எந்தவி தத் தண்டனையும் வழங்கப்படமாட் டாது எனவும் -

மீண்டும் இணைய விரும்புவோர் அருகிலுள்ள இராணுவ முகாம்க ளிலோ, பொலீஸ் நிலையங்களிலோ சரணடையலாம் எனவும் -

அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தாயிரம் ஆண்டில் முதல் தட வையாக இந்த அறிவிப்பை அரசு விடுத்துள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டன:

இராணுவத்துக்குப் புதிதாக ஆள் களைச் சேர்ப்பதற்காக அண்மையில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக ளில் எதிர்பார்த்த பலன் கிடைக்க வில்லை என்று இராணுவ வட்டா ரங்கள் தெரிவித்திருந்தன. அதைய டுத்தே தப்பியோடிய படையின ருக்கு மீண்டும் மன்னிப்புக் காலக் கெடுவை வழங்க முடிவு செய்யப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. (ஐ-7)

## பேச்சுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விருப்பம் தெரிவித்திருந்தது.

அரசாங்கமும் விடுதலைப் புலிக ளும் தமது அரசிடம் வேண்டுகோள் விடுத்தால் பேச்சுக்களுக்கான அனு சரணையாளராகப் பணிபுரிவதற்குத் தயார் என்று கடந்தமாதம் கொழும்பு வந்திருந்த நோர்வே வெளிவிவகாரத் துணை அமைச்சர் லெவி லுண்டே தெரிவித்திருந்தார்.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் நட்வொலே பெக் ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று காலை கொழும்பு வருகின் றார். காலையில் அவர் வெளிவிவ கார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காம ரைச் சந்திப்பார்.

அப்போது அரசு - புலிகள் பேச்சு வார்த்தைக்கு அனுசரணையாளராகப் பணிபுரிந்து உதவுமாறு நோர்வே அர சிடம் கேட்டுக்கொள்ளும் கடிதம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப் படும் எனத் தெரியவந்துள்ளது.

இப்போது அனுசரணையாளராக உதவுமாறு கேட்கப்படும் போதிலும், உகந்த கட்டத்தில் மத்தியஸ்தராகப் பணிபுரியுமாறு நோர்வேயிடம் கேட் கும் மனநிலையில் அரச உயர்பீடம் உள்ளதாக சம்பந்தப்பட்ட அரச சார்பு எம்.பி. உதயனுக்கு மேலும் தெரிவித்தார்.

நோர்வே வெளிவிவகார அமைச் சர் காலையில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்த பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசுவார். மாலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேசிய கையோடு நோர்வே திரும்புவார்.

இன்றைய அவரது நிகழ்ச்சி அட் டவணையில் தமிழ்க் கட்சிகளைச் சந்திப்பது குறித்து எதுவும் தெரி விக்கப்படவில்லை. (அ-3)

## யாழ்.குடா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட் டது.

பாதுகாப்பு அமைச்சின் இந்த முடிவு யாழ்.பிராந்திய கடற்படை தளபதி மற்றும் இராணுவத்தளபதி ஆகியோருக்கும் உடனடியாக அறி விக்கப்பட்டது.

மாநாட்டு முடிவையடுத்து இரண் டொரு தினங்களில் யாழ்.கடல் நீரேரியில் மீன்பிடிக்க மீனவர்கள் அனுமதிக்கப்பட உள்ளனர்.(அ-5)

## இணைப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புக்கு சில சிக்கல்கள் ஏற்படலாம்.

வடக்கு-கிழக்கு இணைப்பு நிரா கரிக்கப்படும்போது பேச்சுவார்த்தை முறிவடையலாம். எனவே பேச்சு வார்த்தைகள் எந்த இடையூறும் இன்றி நடைபெறவேண்டும். நாட்டில் நிரந்தர அமைதி ஏற்படவேண்டும். இதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் கட்சியும் வடக்கு - கிழக்கு இணைப்பிற்கு ஆதரவாகவே இருக் கும் - என்று அவர் தெரிவித்தார். (ஐ-21)

## மியாங்குளத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கும் - வெலிக்கந்த பகுதிக்கும் இடையில் உள்ள மியாங்குளம் என் னும் இடத்தில் வைத்து தாக்குத லுக்கு இலக்கானது.

விடுதலைப் புலிகள் ஏவிய ஆர்.பி.ஜி. மோட்டார்கள் இந்த வாக னத் தொடர் அணியில் பொலீஸாரை ஏற்றிச் சென்ற இரு பஸ்களைத் தாக்கியதாகவும் -

இதனால் அந்த பஸ்களில் பய ணம் செய்த பொலீஸார் உயிரிழக் கவும் காயமடையவும் நேரிட்டதாக வும் மட்டக்களப்புப் பொலீஸ் வட்டா ரங்கள் நேற்று மாலை தெரிவித்தன.

பொலீஸார் பயணம் செய்த இரண்டு பஸ்களில் ஒன்று முற்றாக எரிந்து நாசமாகிவிட்டதாகவும் மற் றொன்று பலத்த சேதமடைந்ததாக வும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மியாங்குளம் பகுதிக்கு அண் மையில் உள்ள காட்டுப் பகுதியில் இருந்தே புலிகள் ஆர்.பி.ஜி. தாக் குதலை மேற்கொண்டனர் என்றும்-

கல்குடா, வாழைச்சேனை ஆகிய படை முகாம்களில் இருந்து இராணு வத்தினர் புலிகளின் நிலைகள் மீது பதிலுக்கு ஆட்லறித் தாக்குதலை நடத்தியதாகவும் -

படை வட்டாரங்களை ஆதாரம் காட்டி மட்டக்களப்புசெய்திகள் தெரி வித்தன.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பொலீஸாரின் சடலங்கள் வாழைச் சேனை ஆஸ்பத்திரியில் நேற்றிரவு வைக்கப்பட்டிருந்தன. காயமடைந்த பொலீஸார் பொலநறுவை ஆஸ்பத் திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

மட்டக்களப்புக்கும் பொலநறு வைக்கும் இடையே வாரத்தில்குறிப் பிட்ட நாள்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நடத்தப்படும் இந்த வாகன அணிச் சேவை புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தலைப் பல தட வைகள் சந்தித்திருப்பது தெரிந் ததே. (ஐ-21-7-5-8)

## இடைக்காலத் தடை நீடிப்பு!

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பில் இருந்து வரதராஜப்பெருமாள் நீக்கப் பட்டதை அடுத்து அக்கட்சியின் செயற்பாடுகளுக்கு விதிக்கப்பட்டி ருந்த இடைக்காலத்தடை உத்த ரவை கொழும்பு நீதிமன்றம் எதிர் வரும் மார்ச் 20ஆம் திகதிவரை நீடித்துள்ளது.

இந்தத் தடை உத்தரவுக்கு எதி ராக சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று ஆட்சேபனை மனு ஒன்றைத் தாக் கல் செய்தார். அவரது சார்பில் சட் டத்தரணி வெண்ட் இளையதம்பி நீதி மன்றில் ஆஜரானார்.

வரதராஜப் பெருமாளின் தரப்பில் சட்டத்தரணி பைசல் முஸ் தபா ஆஜரானார். வரதராஜப் பெருமா ளுக்கு கட்சியில் உள்ள உறுப்புரி மையை நிரூபிக்கும் பல சான்றுக ளைத் தம்மால் சமர்ப்பிக்க முடியும் என்றும் -அதற்கு மேலும் அவகாசம் அளிக்குமாறும் - அவரது சட்டத் தரணி கேட்டுக் கொண்டார். அத னையடுத்தே நீதிமன்றம் இந்த இடைக்காலத்தடை உத்தரவை நீடித்தது. (ஐ-8)


**தேவை**

* காசாளர்
* சிட்டை எழுதுநர்
(பெண்கள்)

விண்ணப்பங்களை நேரில் கையளிக்கவும்.

எமது ஸ்தாபனத்துக்கு அருகில் இருப்போர் விரும் பத்தக்கது.

\- நிர்வாகி

ஷண் ரெக்கோடிங் ஸ்பொட்
பெரியகடை வீதி, யாழ்நகர்.
(73732)

**போஸ்ரர் இலவசம்**

நாசர், பானுபிரியா நடிப்பில்
உள்ளம் உருகும்
குடும்பச் சித்திரம்
ஷண்ணின்
**அன்னை**

இன்று பிரதிகள்
பெறும்போது
போஸ்ரர் இலவசம்

ஷண் றெக்கோடிங் ஸ்பொட்
யாழ்ப்பாணம்.
(73731)

**விரிவுரைகள் ஆரம்பம்**

கல்வியாண்டு 2000/ 2001இன் முதலாவது பிரிவுக் கான விரிவுரைகள் ஆரம்பம். வாரஇறுதி நாள் வகுப்புக்களுக் கான விரிவுரைகள் 20.02.2K (ஞாயிறு) அன்றும், வாரநாள் வகுப்புக்களுக்கான விரிவுரை கள் 21.02.2000 (திங்கள்) அன்றும் ஆரம்பமாகின்றன என்பதை அறியத்தருகின்றோம்.

* புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மேற்படிப் பிரிவுக்கு விண் ணப்பித்த மாணவர்கள் அனை வரும் தவறாது சமூகம் தரவும்.

இயக்குநர்,
I.I.S.
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (C/11037)

**"தரிசனம் இலங்கை 2000"**
**நற்செய்திக் கூட்டம்!**
**சுகமளிக்கும் ஆராதனை!!**

இடம் – அச்சுவேலி மகாவித்தியாலயம், அச்சுவேலி.
காலம் – இன்று (16-02-2000) புதன்கிழமை மாலை 3.00 மணி.

'யாவும் இலவசம்! யாவரும் வருக!!'

"நானே உலகத்திற்கு ஒளியாய்
இருக்கின்றேன் - இயேசுக்கிறிஸ்து"
-(யோவான் 12:46)

கானான் ஜெபஆலயம்
இருபாலை.
(73703)

**HITECH**
COLLEGE OF COMPUTER STUDIES
**புலமைப் போட்டிப் பரீட்சை**

இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்தி களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறாதவர் கள் நிறுவனத்துடன் நேரடியாக உடன் தொடர்பு கொள்ளவும்.

**Exam Date 19/02/2K**
TIME 10 A.M -12 Noon

Director
*HITECH*
Kokkuvil.
(73720)


## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையைச் சேர்ந்த குடும்பநல உத்தி யோகத்தர் திருமதி விஜயலட்சுமி யோகராசா அவர்களின் அன்புத் தந்தை

### வினாசி

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
பருத்தித்துறை. (C/11038)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி ஞானசேகரன்

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி ஞானசேகரன் (ஓய்வுபெற்ற தொலைபேசி இயக் குநர், பலாலி விமானச் சேவை) நேற்று (15.02.2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கப்பூர் பென்சனியர் இளையதம்பி - செல்லம்மா ஆகியோரது மூத்த மகனும் காலஞ்சென்ற பூபாலசிங்கத்தின் ஆசை அண்ணனும், ஞானசௌந்தரியின் அன்புச் சகோதரனும், மங்கை யர்க்கரசியின் அன்புக் கணவரும் பாலச்சந்திரன், வசந்தி (ஆசிரியை, சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை), சத்தியபாமா, கௌரியம்மா, நகுலேஸ்வரி, ஞான. திருக்கேதீஸ்வரன் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரது பாசமிகு தந்தையும் ராமநாதன் (ராமநாத் கல்வி நிலையம், ஆலங்குழாய்), தவராசா (சங்குவேலி) ஆகியோரது மாமனும் தேன்மொழி, வதனமொழி, கனிமொழி, அனுஷன், வசந்தன் ஆகியோரது பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைக்காக அவரது இல்லத்தில் இருந்து இன்று (16.02.2000) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஞான. திருக்கேதீஸ்வரன்
இணுவில் தெற்கு. (c/11040)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

### திருமதி கைலாயபதி கணேசன்

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் 56, முதலாம் ஒழுங்கை பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கைலாயபதி கணேசன் நேற்றிரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் வித்துவான் சி.நா.கணேசனின் அன்பு மனைவியும் நாகமுத்து - கண்ணகை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா, கார்த்திகேசு (பொறி யியலாளர், மலேசியா), சுவாமி பிரணவானந்த சரஸ்வதி (தலைவர், திவ்விய ஜீவன சங்கம், மலேசியா) மற்றும் பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரி யும் கருணாம்பாள், நாமநாதன் (முன்னாள் ஊழியர், பெருந்தெருக்கள் திணைக்களம்), கருணாகரன் (பொறியியலாளர், அமெரிக்கா), இராஜாம்பாள் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும் முத்துராசா (ஆட்பதிவுத் திணைக்கள விசேட அடையாள அட்டைப்பிரிவு, யாழ்ப்பாணம்), திருமதி கு.நாமநாதன் (ஆசிரியை, வைத்தீஸ்வராக் கல்லூரி), நந்தினி (கொழும்பு), பாலச்சந்திரன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்ஷினி (யாழ். பல்கலைக்கழகம்), அனுஷா (மருத்துவக் கல்லூரி, அமெரிக்கா), கிருஷாந்தி (சட்டத்துறை, அமெ ரிக்கா), சிந்துஜா (மாணவி, சைவ மங்கையர் கழகம், கொழும்பு) ஆகி யோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2000) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (c/11039)

தகவல்
க.நாமநாதன்
(மகன்)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-02-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.